


ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்: பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி 4 அணா

மலர் 14 | பிப்ரவரி 1953 | இதழ் 2

# ஆக்க வேலைகளே தேவை!

## ஆவேசப் பேச்சுகள் வேண்டாம்!

"ஒரு பள்ளிக்கூடத்தைத் திறப்பது, பத்து சிறைச்சாலைகளை மூடுவதற்குச் சமம்" என்றார் பிரஞ்சு நாட்டுப் பேரறிஞர் விக்டர் **யூகோ.**

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்! ஆலயம் பதினாயிரம் நாட்டல்! அன்ன யாவினும் புண்ணியம் கோடி! ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்!" என்று இன்பத் தமிழில் எழில் மிகு கவிதை தீட்டினார் **தேசீயக் கவிஞர் பாரதியார்.**

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் — என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் — துன்பங்கள் நீங்கும்! சுகம் வரும்! நெஞ்சினில் தூய்மை உண்டாகும்! வீரம் வரும்!" என்று புதிய பாசுரம் புனைந்தார் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.**

"கண் உடையர் என்பவர் கற்றோர்! முகத்திரண்டு புண் உடையர் கல்லாதவர்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெள்ளிய தமிழில் மிகச் சிறந்த உண்மையை அள்ளி எடுத்து நமக்குத் தந்திருக்கிறார் அந்தப் பெரும் புலவர் திருவள்ளுவர்.

"குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டு அழகும், மஞ்சள் அழகும் அழகல்ல! நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால், கல்வி அழகே அழகு" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது நம்முடைய பழந்தமிழ் ஏடு, நாலடியார்.

ஆம்! கல்வியின் அருமை பெருமைகளைப் பற்றி எடுத்து மொழியாத அறிஞர்கள் யாரும் கிடையாது. கல்விச் செல்வம் இல்லாவிட்டால் ஏற்படக்கூடிய கேடுகளைப் பற்றிப் பக்கம் பக்கமாக வர்ணிக்காத புத்தகமும் எதுவும் கிடையாது. இந்தப் பரந்த உலகத்தில் இதுவரை தோன்றியிருக்கின்ற எல்லா அறிஞர்களும் கல்விச் செல்வத்தின் பெருமையை, சிறப்பை, செல்வாக்கை, அது இல்லாத விடத்தில் தோன்றக்கூடிய சங்கடங்களை, துயரத்தை, துக்ககரமான நிலைமையை எடுத்தெடுத்து இயம்பிவிட்டுத்தான் போயிருக்கிறார்கள். அது போலவே ஆதிகாலம் தொட்டு இன்றுவரை எழுதப்பட்டிருக்கின்ற எல்லாப் புத்தகங்களும், கல்வி என்னும் ஒளி இல்லையேல் மனித வாழ்க்கை இருண்டு போய்விடும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தித்தான் இருக்கின்றன.

## கல்வியின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்.

உண்மையிலேயே ஒரு நாடு முன்னேறியிருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிவதற்கான சிறந்த அளவுகோல், அந்த நாடு கல்வித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றம்தான்! எந்த நாடு கல்வித் துறையில் முன்னணியில் முனைந்து நிற்கிறதோ, எந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் எழுதவும் படிக்கவும் வல்ல வந்தல்களாக விளங்குகிறார்களோ, எந்த நாட்டில் உள்ள இளைஞர்கள் கரங்களில் எல்லாம் புத்தகமும் எழுதுகோலும் நித்த நித்தம் தவழ்கின்றனவோ, எந்த ஒரு நாடு கல்லாமை என்கிற அரக்கனை வெட்டி வீழ்த்திவிட்டு வெற்றிக்கொடியை வானளாவப் பறக்கவிடுகிறதோ, அந்த நாடுதான் சீரும் சிறப்பும் பெற்றுச் செழித்து ஓங்க முடியும். அத்தகைய நாட்டில்தான் பசி, பிணி, பஞ்சம், பட்டினி ஆகிய கொடுமைகள் அறிவு எனும் சம்மட்டியின் அடிபட்டு, தூள் தூளாக உடைத்து எறியப்படும். அப்படிப்பட்ட நாட்டில்தான், மக்கள், சோக பிம்பங்களாகச் சோர்ந்து கிடக்காமல், உற்சாகத்தின் உருவங்களாக உல்லாசப் பவனி வந்தபடி இருப்பார்கள். அத்தகைய

நாடுகள்தாம் நாடுகள். ஏனைய நாடுகளையெல்லாம் உண்மையில் நாடுகள் என்று கூறமுடியாது, அறியாமை, ஆணவம், பசி, பஞ்சம், வறுமை ஆகிய இருள் நிறைந்த பாழும் மண்டபங்கள் என்றுதான் கூறவேண்டும். '

ஒரு நாட்டின் முன்னேற்றம், எப்படி அந்த நாட்டில் உள்ள கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறதோ, அதேபோலத் தான், ஒரு நாட்டில் உள்ள கல்வியின் முன்னேற்றம், அந்த நாட்டில் உள்ள ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது.

கல்லூரிக் கல்வி, உயர்தரக் கல்வி, தொழிற் கல்வி ஆகிய கல்வித் துறைகள் எவ்வளவுதான் வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்திருந்தாலும் சரி, அந்த வளர்ச்சி ஒன்றை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு, ஒரு நாடு கல்வித் துறையில் கணிசமான முன்னேற்றம் பெற்றுவிட்டது என்று யாரும் கூறமுடியாது. ஆரம்பக் கல்வி என்கிற அந்த முக்கியமான துறை, போதுமான அளவிலும் தேவையான முறையிலும் சிறந்து பொலிகிற நேரத்தில் மட்டுந்தான், ஒரு நாடு, கல்வித் துறையில் உண்மையாகவே வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை அறிஞர் உலகம் ஒப்புக்கொள்ளும்.

## ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியே சமுதாயக் கட்டிடத்தின் அடிப்படை!

மக்கள் வாழ்க்கை என்பது மலரானால், அந்த மலருக்கு ஒரு மகோன்னதமான சிறப்பை அளிக்கும் மணம் போன்றது ஆரம்பக் கல்வி. மக்கள் சமுதாயம் என்பது ஒரு கட்டிடமானால் அந்தக் கட்டிடத்தைத் தாங்கி நிற்கும் உறுதியான கடைக்கால் போன்றது ஆரம்பக் கல்வி. மக்கள் முன்னேற்றம் என்பது ஒரு போராட்டமானால், அந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் ஒப்பற்ற தளபதி போன்ற நிலையில் இருப்பது ஆரம்பக் கல்வி.

ஆரம்பக் கல்வியின் முன்னேற்றமே, ஒரு நாட்டின் முன்னேற்றம். ஆரம்பக் கல்வி தழைத்து ஓங்குகிறது என்றால் சமுதாயம் செழித்து வளர்கிறது என்று பொருள். ஆரம்பக் கல்வி என்கிற ஒளி, நாடெங்கும் பரவத் தொடங்கி விட்டது என்றால், அந்த நாட்டில் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற வறுமை, அறியாமை முதலிய இருட்படலங்கள் இனி, இருந்த அடையாளம் தெரியாமல் மறைந்துபோகும் என்று அர்த்தம்.

இந்த அரிய உண்மையை அறிந்திருக்கும் காரணத்தால்தான், இங்கிலாந்து, சோவியத் ரஷ்யா, அமெரிக்கா போன்ற முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் ஒவ்வொன்றும், கட்டாய ஆரம்ப இலவசக்

கல்வி என்கிற திட்டத்தை, தங்களுடைய ஏனைய திட்டங்கள் எல்லா வற்றையும்விட மிக முக்கியமான திட்டமாகக் கொண்டிருக்கின்றன. அந்த நாடுகளில் எல்லாம், "பள்ளிக்கூடம் செல்லவேண்டிய வய துடைய பிள்ளைகள் அத்தனை பேரும் கட்டாயமாகப் பள்ளிக்கூடம் சென்றாகவேண்டும்" என்கிற சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை மீறி எந்தப் பெற்றோராவது தம்முடைய பிள்ளை களைப் பள்ளிகளுக்கு அனுப்பாமல் இருந்தால், அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை அளிக்கிறார்கள். "எங்களுக்கு என் னவோ, எங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டுமென்று ஆசை தான். அந்தப் பிள்ளைகள் படித்து முன்னேறி, நாட்டுக்கும் சமுதா யத்திற்கும் நற்பணி புரியவேண்டுமென்று ஆவல்தான். ஆனாலும் நாங்கள் என்ன செய்வோம்? எங்கள் பிள்ளைகளைப் படிக்க வைப்பதற் குத் தேவையான பணம் எங்களிடம் இல்லையே" என்று கூறி, பெற்றோர்கள் தப்பித்துக்கொள்ளாமல் இருப்பதற்காக, அந்த நாடு களிலெல்லாம், எல்லா மாணவர்களுக்கும் ஆரம்பக் கல்வி இலவசமாக அளிக்கப்படுகிறது. இலவசமாகவும் கட்டாயமாகவும் எல்லா மாண வர்களுக்கும் ஆரம்பக் கல்வியை அளிக்கும் பொறுப்பை, அங்கெல் லாம், ஆட்சியாளர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கட்டாய இலவச ஆரம்பக் கல்வி, அங்கு ஆட்சியாளர்களின் செலவிலே தரப் படுகிறது. இப்படியெல்லாம் ஆரம்பக் கல்வியை விரைவில் வளர்க் கும் பொறுப்பை அங்கே ஆட்சியாளர்களே ஏற்றுக்கொண்டிருக்கும் காரணத்தால், அந்த நாடுகள் எல்லாவற்றிலும் கல்வி நீரோடை சமுதாயம் முழுவதிலும் பாய்ந்திருக்கிறது. பாயவே, அந்த நாடு களில் உள்ள மக்கள் அத்தனை பேரும் கல்வியறிவு படைத்தவர்களாக விளங்குகிறார்கள்.

## அரசியல் திட்டம் பிறப்பித்துள்ள ஆணை!

நம்முடைய நாட்டில் உள்ள மக்களும் அதுபோலவே கல்வியறி வில் சிறந்து விளங்க வேண்டும் என்கிற ஆசை நம் நாட்டின் அரசியல் திட்டத்தைத் தீட்டிய டாக்டர் அம்பேத்கார்போன்ற அறிஞர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏற்படவேதான் அவர்கள், "இந்தியாவில் உள்ள ஒவ்வோர் இராஜ்ய சர்க்காரும், தங்கள் இராஜ்யத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும், அந்தப் பிள்ளைகளுக்குப் பதினன்கு வயது முடிகிற வரையில், கட்டாயமாகவும், இலவசமாகவும் ஆரம்பக் கல்வியை அளிக்க வேண்டும். இந்த அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்து பத்து ஆண்டுகள் முடிவதற்குள் இந்தப் பணியை முடிக்க ஆட்சியாளர்கள் முயல வேண்டும்."

என்பதாக ஒரு விதியை, புதிய அரசியல் திட்டத்தின் 45-வது விதியாக இணைத்திருக்கிறார்கள்.

ஆம்! அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து பத்து ஆண்டுகள் முடிவதற்குள் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியைப் பள்ளிச்செல்லும் வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் தந்தாக வேண்டும் என்று அரசியல் திட்டம் ஆணையிடுகிறது.

அந்த அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து மூன்று ஆண்டுகள் முடிந்து, நான்காவது ஆண்டும், ஆரம்பமாகிவிட்டது.

என்றாலும்கூட, இன்றைய தினம் வரையில், கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டத்தை, சென்னை ராஜ்ய ஆட்சியாளர்களும் சரி, இந்தியாவில் உள்ள வேறு ராஜ்யங்களின் ஆட்சியாளர்களும் சரி, யாருமே நடை முறைக்குக் கொண்டுவரவில்லை. கொண்டு வாராதது மட்டுமல்ல; கொண்டு வரவேண்டுமே என்கிற கவலைகூடக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், பள்ளிக்கூடம் செல்வதற்கேற்ற வயதுடைய பிள்ளைகள் சுமார் 80 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் பாதிப் பேருக்கு மட்டும்தான், அதாவது சுமார் 40 லட்சம் பிள்ளைகளுக்கு மட்டும்தான் இப்போது கல்வியறிவு ஊட்டப்படுகிறது. மிச்சமுள்ள 40 லட்சம் பேரும் கல்வியறிவினைப் பெற முடியாத வேதனைமிக்க நிலையிலேதான் வளர்ந்து வருகிறார்கள்.

தற்போது கல்வியறிவினைப் பெற்று வருகிற 40 லட்சம் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டிவரும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை-1951-ல் சென்னை ஆட்சியாளர்கள் வெளியிட்டுள்ள கணக்கின்படி—37, 801.

ஆகவே, மிச்சமுள்ள 40 லட்சம் பிள்ளைகளுக்கும், ஆரம்பக் கல்வி என்கிற அரிய கருவூலத்தை அளிக்க வேண்டுமானால், இப்போது இருக்கும் 37, 801 ஆரம்பப் பள்ளிகள் போக, மேற்கொண்டு புதிதாக இன்னுமோர் 37,801 பள்ளிகளை ஏற்படுத்தியாக வேண்டும் ஆட்சியாளர்கள்.

## ஏற்படவேண்டும் 37,800 பள்ளிகள்!

ஆம்! சென்னை ராஜ்ய மக்கள் அனைவரும் எழுத்தறிவு பெற்றவர்களாக மாறவேண்டுமானால், சென்னை ராஜ்யத்தில் செழித்து ஓங்கி நிற்கும் கல்லாமை என்கிற கொடியவனை நாட்டைவிட்டு விரட்டியடித்து ஒழிக்கவேண்டுமானால், இந்த ராஜ்யத்தில் உள்ள பதினான்கு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் 100-க்கு 100 பேரும் ஒருவர் தவறாமல், பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள் என்று நாம் தலைநிமிர்ந்து கூறுகிற சிறந்த நிலை உருவாக வேண்டுமானால், சென்னை

ராஜ்ய ஆட்சியாளர்கள் செய்ய வேண்டிய முதற் காரியம், முக்கிய மான காரியம், மக்கள் மன்றத்தில் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத் தக் கூடிய காரியம், 57,801 ஆரம்பப் பள்ளிகளைப் புதிதாகத் துவக்கி நடத்துவதுதான்.

வேறு எந்த அரிய செயலையும் இந்த ஆட்சியாளர்கள் செய்யட் டும், அல்லது செய்யாமல் போகட்டும், இந்த ஓர் உயரிய பணியை மட்டும் உள்ளன்புடனும் உண்மையான அக்கறையுடனும் செய்யத் தொடங்கிவிட்டால் போதும். இந்த ஆட்சியாளர்களை, நம் நாடு மட்டுமே அல்ல, இந்த நானிலமே வியந்து பாராட்டும்.

ஆனால் செய்தார்களா இந்த ஆட்சியாளர்கள் இந்த அரிய பணியை ?—செய்யவில்லை செய்ய முயலவும் இல்லை—முயலாதது மட்டு மல்ல—ஏற்கனவே இந்த அரிய பணியை ஆர்வத்துடன் புரிந்து வரு கின்ற **எயிடட் பள்ளி மானேஜர்களைக்** கிண்டல் செய்யவும், உருட்டி மிரட்டவும், அச்சுறுத்தி அடக்கவும், அடக்கு முறைக்கு ஆளாக்க வும் முன் வந்திருக்கிறார்கள்- இவர்களுடைய இந்தச் செய்கைதான் நம் உள்ளத்திற்கு மிகவும் வேதனை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது.

ஒரு காரியம்- உன்னதமான காரியம்—இவர்கள் செய்யவேண்டிய காரியம்—வேறு நாடுகளில் எல்லாம் இவர்களைப் போன்ற நிலையில் உள்ளவர்கள் செய்துவருகின்ற காரியம்—அந்தக் காரியத்தை இவர் கள் செய்யவில்லை—வேறு சிலர் செய்கிறார்கள்—அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது இவர்களுடைய கடமை—ஆனால் இவர்களோ நன்றி செலுத்தாதது மட்டுமல்ல, நற்பணி புரிகின்ற அந்த நல்லவர் களை இழித்தும் பழித்தும் குறைத்தும் குறை கூறியும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்—இது நியாயமா ? நல்லது தானா இந்தப் போக்கு ? ஆரம்பக் கல்வி வளர்வதற்கு ஏற்ற வழியா இது ?

சென்னை ராஜ்யத்தில் உள்ள வேறு யாரையும் விட, ஆரம்பக் கல்வியை வளர்க்கும் பணியை, மிக அதிகமான அளவிலும், மிகச் சிறந்த முறையிலும், மிக நல்ல ஆர்வத்துடனும் புரிந்து வருபவர்கள் எயிடட் பள்ளி மானேஜர்கள்தான் என்பதை நல்லறிவாளர்கள் எவரும் மறுத்தல் இயலாது. சென்னை ராஜ்யத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் மிகப் பெரும்பாலானவை எயிடட் பள்ளி மானேஜர் களால்தான் நடத்தப்படுகின்றன. ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு ஏனைய எந்த ஸ்தாபனங்களையும்விட அவர்கள்தான் அதிகமாகப் பாடுபட்டு வருகிறார்கள். நாம் கூறும் உண்மை மட்டுமல்ல இது. 1951-ல் ஆட்சியாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையே கூறும் உண்மை.

இதோ பாருங்கள், அந்த அறிக்கையில் உள்ள புள்ளி விவரங்கள் பேசுகின்ற உண்மையை :

1949-50-ம் ஆண்டில் சென்னை ராஜ்யத்தில் இருந்த ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 37,801.

| | |
|---|---|
| இவற்றில், சர்க்காரால் நடத்தப்படுபவை | 1,932 |
| முனிசிபாலிடிகளால் நடத்தப்படுபவை | 1,500 |
| ஜில்லா போர்டுகளால் நடத்தப்படுபவை | 14,859 |
| பஞ்சாயத்து போர்டுகளால் நடத்தப்படுபவை | 1,094 |
| எயிடட் பள்ளிகளால் நடத்தப்படுபவை | 18,359 |
| அன் எயிடட் பள்ளிகளால் நடத்தப்படுபவை | 57 |

புள்ளி விவரம் பேசுகின்றது—மொத்தமுள்ள ஆரம்பப் பள்ளிகள் 37,801. இவற்றில் எயிடட் பள்ளிகள் மட்டும் 18,359! அதாவது, மிகப் பெரும் பகுதி!

ஏற்கனவே உள்ள ஆரம்பப் பள்ளிகளில் எயிடட் பள்ளிகளின் எண்ணிக்கையே பெரும் பகுதி எனபது மட்டுமல்ல உண்மை, புதிதாகத் தொடங்கப்படுகின்ற ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையிலும் எயிடட் பள்ளிகளே முதல் இடம் பெறுகின்றன.

1949–50–ம் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 1546.

| | |
|---|---|
| இவற்றில் சர்க்காரால் நடத்தப்படுபவை | 89 |
| முனிசிபாலிடிகளால் நடத்தப்படுபவை | 60 |
| ஜில்லா போர்டுகளால் நடத்தப்படுபவை | 449 |
| பஞ்சாயத்து போர்டுகளால் நடத்தப்படுபவை | 60 |
| எயிடட் பள்ளிகளால் நடத்தப்படுபவை | 862 |
| அன் எயிடட் பள்ளிகளால் நடத்தப்படுபவை | 26 |

ஆமாம் நண்பர்களே, புள்ளி விவரம் மீண்டும் பேசுகின்றது-மொத்தம் துவக்கப்பட்ட பள்ளிகள், 1546. இவற்றில் எயிடட் பள்ளிகள் மட்டுமே 862. அதாவது 100–க்கு 60 பங்கு!

## எழில்மிகு, பணி புரிபவர்கள், எயிடட் மானேஜர்கள்

இருக்கின்ற பள்ளிகளிலும் எயிடட் பள்ளிகள்தான் அதிகம். புதிதாகத் துவக்கப் படுகின்ற பள்ளிகளிலும் எயிடட் பள்ளிகள் தான் அதிகம்—மகிழ்ச்சியூட்டும் உண்மை இது-ஆனால் உண்மை இந்த அளவோடு நின்றுவிடவில்லை—ஆரம்பப் பள்ளிகளுக்காக வென்று கட்டப்படுகின்ற கட்டிடங்களின் எண்ணிக்கையிலே கூட, எயிடட் பள்ளிகள் தான் முன் வரிசையில் முதல் இடத்தில் நிற்கின்றன.

1948-49, 1949-50- ஆகிய இரண்டு ஆண்டுகளில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளி கட்டிடங்கள் மொத்தம் எத்தனை என்பதையும், அவற்றிலே யார் யார் கட்டிய கட்டிடங்கள் எத்தனை என்பதையும் விளக்கும் புள்ளி விவரம் இது :—

| கட்டியவர்களின் பெயர் | கட்டிடங்களின் எண்ணிக்கை 1948—49 | 1949—50 |
|---|---|---|
| சர்க்கார் | 11 | 5 |
| முனிசிபாலிடிகள் | 6 | 20 |
| ஜில்லா போர்டுகளும் பஞ்சாயத்து போர்டுகளும் | 53 | 28 |
| எயிடட் பள்ளிகள் | 217 | 327 |
| அன் எயிடட் | — | 3 |
| மொத்த எண்ணிக்கை | 287 | 383 |

ஆம்! 1948–49-ல் கட்டப்பட்ட கட்டிடங்கள் 287. இவற்றில் எயிடட் பள்ளிகளின் எண்ணிக்கை 217. அதுபோலவே 49-50–ல் கட்டப்பட்ட மொத்த கட்டிடங்கள் 383-ல், எயிடட் பள்ளிகளின் கட்டிடங்கள் 327.

ஆகவே எந்தப் புள்ளி விவரங்களை முன் வைத்துப் பார்த்தாலும் சரி, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்காக வேறு எந்த ஸ்தாபனத்தையும் விட அதிகமாகப் பாடுபடுபவர்கள் எயிடட் பள்ளி மானேஜர்கள்தான் என்பது அசைக்க முடியாத உண்மை என்று ஏற்படுகிறது.

இத்தகு நற்பணியை நன்முறையில் ஆற்றி வரும் எயிடட் பள்ளி மானேஜர்கள் மீதுதான் காரணமின்றிக் கடுங்கோபம் காட்டியிருக்கிறார் சென்னை ராஜ்ய கல்வி அமைச்சர் திருவாளர் டாக்டர் எம். வி. கிருஷ்ணாராவ்.

10–1–53 அன்று, பட்டாம்பி என்னும் இடத்தில் நடைபெற்ற அகில மலையாள ஆசிரியர் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகிற போதுதான், டாக்டர் கிருஷ்ணாராவ், எயிடட் மானேஜர்கள் ஆற்றி வரும் சிறந்த தொண்டினைப் போற்றிப் புகழ்வதற்குப் பதிலாக அவர்கள் மீது இனியவை அல்லாத சொற்களை வீசியிருக்கிறார்.

எயிடட் பள்ளிகள் சரிவர நடத்தப்படுவதில்லையாம்—ஆசிரியர்கள் சம்பளம் ஒழுங்காகத் தரப்படுவதில்லையாம்—பள்ளி நிர்வாகம் நல்ல முறையில் இல்லையாம்—இப்படியெல்லாம் நிலைமை இருக்குமானால், சர்க்காரே அந்தப் பள்ளிகளை எடுத்துக் கொண்டு விடுவார்களாம்—

இல்லையானால், மானேஜர்கள் மூலமாக ஆசிரியர்களுக்கு சர்க்கார் கொடுத்துவரும் கிராண்டுகளை நேரடியாகவே கொடுக்க ஆரம்பித்து விடுவார்களாம்—ஜாக்கிரதை ஜாக்கிரதை என்று பேசியிருக்கிறார் அமைச்சர். அவசியமில்லாத இடிமுழக்கம் இது! அர்த்தமில்லாத பேச்சு!!

## ஒரு மரம் தோப்பு ஆகுமா?
## ஒருவர் தவறு அனைவரையும் பாதிக்குமா?

பள்ளிக்கூட நிர்வாகத்தைச் சரிவரக் கவனிக்காமலும், ஆசிரியர்களுக்குரிய ஊதியத்தை ஒழுங்காகத் தாராமலும் இருக்கின்ற எவிடட் மானேஜர்கள் யாரோ ஒருவர் இருவர் இருக்கலாம்—இல்லையென்று நாம் கூறவில்லை—ஆனால், அதற்காக மானேஜர்கள் வகுப்பையே இழித்துக் கூறுவது அறம் ஆகாது—ஆரம்பக் கல்வியை வளர்ப்பதற்கான முறையும் அது அல்ல.

இரண்டொரு மானேஜர்கள் தவறு செய்தால், ஆசிரியர்களுக்குத் தரவேண்டிய ஊதியத்தைத் தராமல் இருந்தால், பள்ளிக்கூட கிராண்டுகளைத் தவறான வழிகளில் செலவழித்தால், அப்படிப்பட்ட மானேஜர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற உரிமை பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்களுக்கு இருக்கிறது. நாம் வேண்டாமென்று கூறவில்லை. அவர்கள் அந்த உரிமையைத் தாராளமாகப் பயன்படுத்தட்டும்—அப்படிப்பட்ட மானேஜர்களுக்குரிய கிராண்டுகளை 'சஸ்பெண்ட்' செய்யட்டும்—ஊழல் அப்போதும் திருந்தவில்லையென்றால் அத்தகைய பள்ளிகளையே வேண்டுமானாலும் சர்க்கார் கலைத்து விடட்டும்—அது தான் முறை, நியாயம், ஒழுங்கு. அதை விட்டுவிட்டு ஒருவர் இருவர் செய்கிற தவறுகளுக்காக ஆரம்பக் கல்வியை வளர்க்கும் அரும் பெரும் பணியை ஆற்றிவருகின்ற எல்லா மானேஜர்கள் மீதும் கோபத்தைப் பொழிவது முறை அல்ல. தங்களிடம் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு, சர்க்கார், நேரடியாகவே சம்பளத்தைத் தருவது என்கிற ஏற்பாட்டை சுயமரியாதை உள்ள எந்த மானேஜரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்—சந்தேகமே வேண்டாம் சர்க்காருக்கு! அப்படி ஓர் ஏற்பாடு வருமானால், ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் இடையே இப்போது உள்ள நல்லுறவு குலைந்து போகும். பள்ளிக்கூடத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவமாட்டா. பள்ளியின் அமைதி குலையும். ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி தடைப்படும். சர்க்காரே எல்லாப் பள்ளிகளையும் எடுத்து நடத்துவது என்பதும் நடக்கக் கூடிய காரியம் அல்ல. அது வெறும் பயமுறுத்தல்.

சென்னை ராஜ்யத்தில் ஆரம்பக்கல்வி வளர்ச்சிபெற வேண்டும் என்கிற எண்ணம் உண்மையாகவே ஆட்சியாளர்களுக்கு இருக்கு

(12-ம் பக்கம் பார்க்க)

# இல்லாத ஊருக்குப் போகாத பாதை !

## அர்த்தமற்ற திட்டம் ! அவசியமற்ற போக்கு !

### ஆட்சியாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் !

இல்லாத ஊருக்குப் போகாத பாதையைத் தெரியாத மனிதனிடம் புரியாத முறையில் கேட்பதா? என்றோர் பழமொழி உண்டு தமிழ் நாட்டில் ! சென்னை ஆட்சியாளர்களின் கல்வித்துறை அதிகாரிகள் ஆரம்பப் பாடசாலைகளின் கல்வித் திட்டத்தைப் பற்றி அண்மையில் பிறப்பித்துள்ள ஓர் உத்தரவைக் கண்டபோது, நமக்கு, இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வரலாயிற்று.

நீண்ட காலமாக, ஆரம்பப் பாடசாலைகளில், வரலாறு—பூகோளம்—விஞ்ஞானம் அலலது இயற்கைக் கல்வி—சிவிக்ஸ் அல்லது ஆட்சிமுறை ஆகிய இந்த நான்குபாடங்களும்தனித்தனியே நடத்தப்பட்டு வருகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி புத்தகங்கள் உண்டு. தனித்தனி 'பீரியடுகள்' ஒதுக்கப்பட்டுள்ளன. அதனதன் பீரியடுகளில், அந்தந்தப் பாடத்தை, ஆசிரியரும், தனித்தனியே, ஒன்றோடு ஒன்றைக் கலக்காமல்,விளக்கமாகவும்தெளிவாகவும் புகட்டி வருகிறார். வரலாற்று வகுப்பிலே வரலாற்றுப் பாடங்கள், சிவிக்ஸ் வகுப்பிலே சிவிக்ஸ் பாடங்கள், பூகோள வகுப்பிலே பூகோளப் பாடங்கள், விஞ்ஞான வகுப்பிலே விஞ்ஞானப் பாடங்கள் என்று இந்த முறையிலே, மாணவர்களும், ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனியே படித்து, அந்தந்தப் பாடத்திலும் சிறந்த அறிவும், சீரிய தேர்ச்சியும் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பாடத்தையும் தனித்தனியே புகட்டும் இந்த முறை இளம் பிள்ளைகளின் கல்வியறிவை எளிதில் வளர்ப்பதற்கு ஏற்ற கருவியாக அமைந்திருக்கிறது. இந்த முறையை மாற்றி, இந்தத் துறையில் வேறு முறையைப் புகுத்த வேண்டிய அவசியம் எதுவும் இன்றைய தினம் கிடையாது.

என்றாலும், ஏனோ தெரியவில்லை, சென்னை ஆட்சியாளர்கள், அண்மையில், 1954-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல், ஆரம்பப் பள்ளிகளில், இந்த நான்கு பாடங்களையும் தனித்தனியே புகட்டுதல் கூடாது என்றும், இந்த நான்கு பாடங்களையும் ஒன்றாகச் சேர்த்து சமூக அறிவு நூல் (Social Studies) என்னும் தலைப்பைக் கொண்ட ஒரே பாடமாகப் புகட்டுதல் வேண்டும் என்றும், ஒரு விசித்திரமான அறிக்கையைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

அரசாங்கத்தாரின் இந்த அறிக்கை நடைமுறைக்கு வருமானால், அதனால், ஆரம்பக் கல்வி, குழப்பமும் சிக்கலுமான ஒரு நிலைமையை அடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நாம் தொடக்கத்திலேயே எடுத்துக் காட்டியிருப்பதைப் போல, நான்கு பாடங்களும் தனித்தனியே புகட்டப் பட்டால், மாணவர்கள், ஒன்றுடன் ஒன்றைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல், ஒவ்வொன்றையும் தெள்ளத் தெளிய அறிந்துகொள்வார்கள். அப்படியின்றி அரசாங்கத்தாரின் இந்தப் புதிய உத்தரவின்படி நான்கு பாடங்களும் ஒரே பாடமாக ஆக்கப்பட்டுவிட்டால், மாணவர்கள் உள்ளத்தில் குழப்பம் உண்டாவது உறுதி.

ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சின்னஞ் சிறு குழந்தைகள். அன்றலர்ந்த தாமரைகள். சிக்கலான பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்குத் தேவையான நுணுக்கமான ஆற்றல் இல்லாதவர்கள். அப்படிப்பட்ட . மூல்லை மொக்குகளின் கல்வித் திட்டத்தில் இப்படிப்பட்ட குழப்பமான நிலைமையை ஏற்படுத்துவது முறையாகாது என்பது நம் கருத்து. ஒரே பாடத்தில், ஒரே புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த நான்கு பாடங்களையும், ஒன்றாகக் கூட்டிக் குழப்பிக் கலந்து கதம்ப உருவத்தில் அந்த இளம் பிள்ளைகளுக்குரிய அறிவு உணவாக அளித்தால், அந்த உணவை, அந்தப் பிள்ளைகளால் எப்படி ஜீரணிக்க முடியும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

உயர்திருவாளர் அவினாசிலிங்கனார் அவர்கள் சென்னை மாநிலத்தின் கல்வி அமைச்சராக இருந்தபோது செகண்டரி பாடசாலைகளின் கல்வித் திட்டத்தில் இப்படித்தான் ஒரு குழப்ப நிலையை உருவாக்கி வைத்தார். சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களையும் ஒரே பாடமாக்கி, அதற்கு (Social Studies) சமூக அறிவு நூல் என்ற பெயரையும் சூட்டி, அந்த முறைப்படிதான் செகண்டரி பள்ளிகளில் பாடம் புகட்டப்பட வேண்டும் என்று அவர் கட்டளை பிறப்பித்தார். அந்தக் கட்டளையின்படி பாடம் புகட்டப் பட்டு, பள்ளிக்கூடத்தில் தேர்ச்சி பெற்று, எஸ். எஸ். எல். சி வகுப்பை முடித்துவிட்டு வெளியே வருகிற மாணவர்களின் கல்வி அறிவு இப்போது எப்படி இருக்கிறது தெரியுமோ? ஒரே குழப்பமயமாக இருக்கிறது. பூகோளம், விஞ்ஞானம், சரித்திரம், எதிலுமே அவர்களுக்குத் தெளிவான அறிவும் திட்டமான பயிற்சியும் இல்லாமல் போய் விட்டது.

அதே வகையான பரிதாப நிலைமைதான் ஆரம்பப் பள்ளிகளிலும் ஏற்பட்டுவிடும் ஆட்சியாளர்களின் புதிய திட்டம் அமுலுக்கு வருமானால்.

ஆகையால்தான் நாம் ஆட்சியாளர்களுக்கு அன்புடனும் பணிவுடனும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம். நாடாள வந்தவர்களே! நல்ல திட்டம் அல்ல இது! இது, ஆரம்பக் கல்வியின் வளர்ச்சிக்கு ஏற்ற செய்கையும் அல்ல; மக்களால் வரவேற்கப்பட வேண்டிய முறையும் ஆகாது. இந்தத் திட்டம் அர்த்தமற்றது. அவசியமுமற்றது. ஆகையால் இந்தப் புதிய ஏற்பாட்டை உடனடியாகக் கைவிட்டுவிடுவதுதான் நல்லது. இந்தத் திட்டம் மட்டுமே அல்ல, ஆரம்பக் கல்வியைப் பாதிக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, ஆரம்ப ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய ஆலோசனையையும் சம்மதத்தையும் பெற்ற பிறகு, அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதுதான் முறை. அதுதான் நியாயம். அதுதான் ஆரம்பக் கல்வியை வளர்ப்பதற்கான அருமையான மார்க்கம். அப்படியின்றி எந்த ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியைப் புகட்டும் புனிதமான பணியைப் புரிந்துவருகிறார்களோ,—அவர்களைக் கலந்து பேசாமல், எந்த மானேஜர்கள் ஆரம்பக் கல்வியின் விரைவான வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு வருகிறார்களோ அவர்களின் கருத்தை அறிந்து காரியம் ஆற்றாமல், ஆட்சியாளர்கள், தங்கள் மனம்போன போக்கில் புதுப்புது குழப்பங்களைக் கல்வித் துறையில் உருவாக்கிக் கொண்டிருப்பதால் ஆரம்பக் கல்வியும் வளர்ச்சியடையாது. நம் நாட்டின் எதிர்காலமும் ஒளி பொருந்தியதாக ஆகாது.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மானால், அவர்கள் ஆற்றவேண்டிய செயல், இப்படிப்பட்ட 'இடிமுழக்கம்' புரிவதல்ல. படிக்கவேண்டிய பிள்ளைகள் 40 லட்சம் பேர் படிக்காமல் கிடக்கிறார்களே இந்த ராஜ்யத்தில், அவர்கள் அத்தனை பேரையும் படிக்க வைப்பதற்காக முயலவேண்டும் ஆட்சியாளர்கள். அதற்குத் தேவைப்படுகின்ற சுமார் 37,800 பள்ளிகளையும் உடனே தொடங்க வேண்டும். கட்டாய ஆரம்ப இலவசக் கல்வித் திட்டம் ஒன்றை வகுத்து நாடெங்கும் அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். ஒரு பத்தாண்டுக் காலத்திற்குள், எழுத்தறிவின்மை என்கிற பத்தாம் பசலி அத்தியாயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

ஆரம்பக் கல்வி விரைவில் பரவவேண்டுமானால், அதற்கு அத்தகைய ஆக்க வேலைகளே தேவை. ஆவேசப் பேச்சுகள் வேண்டாம்.

# சுழலும் உலகம்

[காலச் சக்கரம் வேகமாகச் சுழல்கிறது. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாக உருள்கின்றன. தினந்தோறும் உலகத்தில் மக்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய புதிய நிகழ்ச்சிகள் நடந்தபடி இருக்கின்றன. காலையில் எழுந்ததும் தினசரி ஏடுகளைப் பிரித்துப் பார்த்தால், "எகிப்தில் புரட்சி—மன்னர் விரட்டப் பட்டார்," "மலேயாவில் குழப்பம்—மகத்தான போராட்டம்," "டுனீசியாவில் விடுதலைக் கிளர்ச்சி" என்பன போன்ற செய்திகள், பக்கம் பக்கமாகக் காணப்படுகின்றன. உலக அரங்கத்தில் நாள் தோறும் நடைபெறுகின்ற இப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சிகளை ஒவ்வோர் மாதமும், சுருக்கமான முறையிலும் தெளிவான நடையிலும் எடுத்து விளக்குவது இந்தப் பகுதி.]

* * *

## மக்கள் எழுச்சி! மமதையின் வீழ்ச்சி!

இந்தியாவுக்கு வடக்கே, இமயமலைக்கு அப்பால் இருக்கும் பழம்பெரும் நாடு சீனா. அந்த சீனா தேசத்தைச் சென்ற இருபதாண்டுக் காலமாகத் தன் மனம்போனபடி ஆட்டிப்படைத்து வந்தான் அந்த நாட்டுக் கொடுங்கோலன் சியாங்-கே-ஷேக். பசியோ பசி என்று மக்கள் பதறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சியாங்-கே-ஷேக்கோ உப்பரிகை மீது உல்லாசமாக உலவிக்கொண்டிருந்தான். அதிகாரிகளின் அட்டகாசம், பணமுதலைகளின் பேயாட்டம், ஏழை மக்களின் வேதனை, லஞ்ச ஊழல்களின் கொடுமை—இந்த நல்ல பாம்புகளால் கடிக்கப்பட்டு, உயிருக்கே ஊசலாடிக் கொண்டிருந்தது சீனா. ஆனால் சியாங்-கே-ஷேக்கோ நாட்டின் நன்மைக்காக நற்பணி ஏதும் புரியாது அதிகார மமதை காரணமாக அடக்குமுறை அத்தியாயத்தை வாசித்துக் கொண்டிருந்தான். பொறுமையின் எல்லையை அடைந்துவிட்டார்கள் மக்கள். பெரும் புரட்சி ஒன்று எழுந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னால். தூள் தூளாயிற்று அந்தக் கொடுங்கோலனின் ஆட்சி. தவிடுபொடியாயிற்று அவனுடைய அதிகாரம். அவனுடைய படை வரிசைகளேகூட அவனுக்கு எதிராகப் போர் புரியத் தொடங்கின. பயந்து ஓடினான் சியாங், பக்கத்தே இருக்கும் 'பார்மோசா' என்ற தீவுக்கு! விரைந்து எழுந்தது மக்கள் ஆட்சி—சீனாவில்— மாசேதுங் என்கிற கம்யூனிஸ்ட் தலைவர் தலைமையில்!

பிற்போக்குச் சக்திகளின் பிம்பம்தான் சியாங் என்ற போதிலுங் கூட, அவன், சோவியத் ரஷ்யாவுக்கும் கம்யூனிச ஆட்சிகளுக்கும் விரோதமாக இருக்கிறான் என்ற காரணத்திற்காக, அவன், தன் நாட்டு மக்களால் விரட்டப்பட்ட பிறகும்கூட அவனை ஏற்றிப் போற்றிப் பாதுகாத்து ஆதரித்து வந்தது அமெரிக்கா. தன்னுடைய ஆதிக்கத்தில் உள்ள "பார்மோசா" தீவில் சியாங் அடைக்கலம் புகுந்ததும் அவனுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தது.

சகல வசதிகளையும் செய்து கொடுத்தது-ஆனால் அதே நேரத்தில், சியாங், எந்தக் காரணத்தை முன்னிட்டும், தன்னுடைய சீன நாட்டில், தற்போது ஆதிக்கத்தில் இருந்து வரும் கம்யூனிச ஆட்சியின் மீது போர் தொடுக்கக்கூடாது என்று திட்ட வட்டமாகத் தாக்கீதும் பிறப்பித்து விட்டது.

## தடை உத்தரவு தோன்றாமல் இருந்தால்...!

இப்படிப்பட்ட ஒரு தடை உத்தரவைப் பிறப்பிக்காமல் இருந்தால், தன்னிடம் மிச்சம் மீதியாக உள்ள கப்பல்களையும் படை வரிசைகளையும் புதிய சீனாவின் மீது ஏவக்கூடும் சியாங்-அப்படி ஏவினால் கம்யூனிஸ்ட் சைனா, சியாங்-கே-ஷேக்கைத் திருப்பித் தாக்குவது நிச்சயம்-அமெரிக்காவால் ஆதரிக்கப்படுகிற சியாங் கே ஷேக்குக்கும், தன்னுடைய கூட்டுத் தோழனான கம்யூனிஸ்ட் சீனாவுக்குமிடையே போராட்டம் மூண்டால், அதனைப் பார்த்த பிறகும் சும்மா இருக்க முடியாது சோவியத் ரஷ்யாவால்—ரஷ்யா, சீனாவின் பக்கம் போராட்டத்தில் குதிக்கக்கூடும்—அந்த நிலையில், அமெரிக்கா, சியாங்கின் பக்கம் நின்று, ரஷ்யாவை எதிர்க்கவேண்டி நேரிடும்—இவ்வளவும் நேரிட்ட பிறகு மற்ற நாடுகளெல்லாம் சும்மா இருக்க முடியுமா-இந்தப் பக்கமோ அல்லது அந்தப் பக்கமோ, அமெரிக்க முகாமோ அல்லது சோவியத் ரஷ்யாவோ ஏதாவது ஒன்றில் சேர்ந்தாக வேண்டிய நிலை உருவாகும்—மூன்றாவது உலக யுத்தம் மூண்டு விடும்.

இன்றைய கம்யூனிஸ்ட் சீனாவின் மீது படையெடுக்க முன்னாள் சீனத் தலைவர் சியாங்-கே—ஷேக்குக்கு அனுமதி கொடுத்தால் இவ்வளவு ஆபத்துகளும் ஏற்படக்கூடும் என்பதை நன்றாக உணர்ந்த காரணத்தால்தான், சென்ற மாதம் வரையில் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்த **ட்ருமன்**, இப்படிப்பட்ட தடை உத்தரவை விதித்திருந்தார் சியாங்—கே—ஷேக் மீது.

## புதிய தலைவர்! பெரிய ஆபத்து !!

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற பொதுத்தேர்தலின் விளைவாக **ஜெனரல் ஐசனேவர்** என்பவர் சென்ற மாதம் முதல்

அமெரிக்காவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் அதிகார பீடத்தில் அமர்ந்ததும் மிக மிக ஆபத்தான தோர் காரியத்தைச் செய்திருக்கிறார்—சியாங்—கே-ஷேக்கின் மீதிருந்த தடையை உடனடியாக நீக்கியிருக்கிறார்.

புதிய 'தலைவர்' பெரிய ஆபத்தை உருவாக்கி விட்டார் என்று உலகத் தலைவர்கள் அனைவரும் கூறுகின்றனர். பிரிட்டன், கைகளைப் பிசைந்து கொள்கிறது. பிரான்ஸ், இனி என்ன ஆகுமோ என்று பயப்படுகிறது. சியாங் இனி என்ன செய்யப் போகிறான் என்பதைக் கூர்ந்து கவனிக்கிறது கம்யூனிஸ்ட் சீனு. அண்மையில் உள்ள சீனுவில் பயங்கரப் போர் மூளுமானல் அதன் அதிர்ச்சி நம்மையும் தாக்கக் கூடுமே என்று விழிப்புடன் இருக்கிறது இந்தியா.

இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற வேண்டும் என்கிற அற்ப ஆசை காரணமாக சீன மண்ணின்மீது செங்குருதி கொட்டப்பட வேண்டிய நிலையை சியாங்—கே—ஷேக் உருவாக்கி விட்டால், அதன் விளைவாக உலகப் போர் மூளலாம்—பயங்கரமான நிலைமை உருவாகலாம்.

அதிகாரம், ஓர் ஆபத்தான தொத்து நோய். யாரையுமே சரி; ஒரு முறை பற்றிக் கொண்டால், அதன் பிறகு, அது விடுவது கிடையாது. அதிகார ருசியை அளவுக்கு மீறி அனுபவித்தவன் சியாங். ருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? மீண்டும் மீண்டும் உறியைத் தாவத் தானே செய்யும்? தாவக்கூடும் சியாங்! தாவினல், ஆபத்து, அகில உலகத்திற்கும் ஏற்படக் கூடும்.

அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் அவசரப்பட்டுச் செய்துள்ள காரியம் அகில உலகத்தையும் ஆபத்துக்கு ஆளாக்கியிருக்கிறது. எல்லோருடைய கண்களும் இன்றையதினம் சியாங்—கே—ஷேக்கைக் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

## அங்கேயும் ஒரு சியாங்!

சீனுவில் மட்டும் தான் சியாங்—கே—ஷேக் தோன்றக்கூடும் என்பதில்லை. எந்த நாட்டிலும் தோன்றக்கூடும். தோன்றினர் மற்றொரு சியாங்—கே—ஷேக் எகிப்து நாட்டில்! அவருடைய பெயர், பரூக்.

மத்திய கிழக்குப் பிரதேசத்தில் உள்ளதோர் இஸ்லாமிய நாடு, எகிப்து! அந்த நாட்டின் அரசராக இருக்கும் பேறு பெற்றவர் பரூக்! அவர் அந்த நாட்டின் மன்னர்! தட்டிக் கேட்க ஆள் கிடையாது! சகல அதிகாரங்களும் அவர் கரத்திலே குவிந்திருந்தன. அவர் ஆட்டிடும் சுட்டு விரலே அந்த நாட்டின் அரசியல் திட்டம்!

இவ்வளவு அதிகாரங்களையும் பெற்றிருந்தவர், இவற்றுடன் நல்ல உள்ளம் என்கிற அந்த அபூர்வமான பொருளையும் உடையவராக இருந்திருந்தால், எகிப்து நாடு, பொன் கொழிக்கும் பூமியாக மாறியிருக்கும்; எகிப்திய மக்கள், எழிலும் இனிமையும் மிக்க புது வாழ்வுப் பூங்காவில் களிப்புக் கீதம் பாடியபடி உலவியிருப்பார்கள். ஆனால் பரூக் அந்த நல்ல பாதையில் நடந்து செல்லவில்லை. மங்கை, மது, இந்த இரண்டையுமே தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கொண்டு, போக போக்கிய பூமியிலே தன் மனம் போனபடி உருண்டு கிடந்தார். மக்களின் வரிப் பணத்தை, பரூக் வாரி இறைத்தார் தன் உல்லாசக் கேளிக்கைகளுக்கு. "நானே மன்னன்! — யார் கேட்க முடியும் என்னை?" என்கிற இறுமாப்பு, அவருடைய விழிகளிலே கூத்தாடிற்று. மக்களின் வேதனைக் குரல் அவருடைய செவிகளிலே எட்டவில்லை. எப்படி எட்டும்? மான்விழி மாதர்களின் மனதை மயக்கும் மனோகர மொழிகளுக்கு பட்டும்தானே அந்த செவிகள் சொந்தம் என்று மன்னர் பரூக் எண்ணிக்கொண்டிருந்தார்!

என்றும் அழியாத அதிகாரம் தன்னுடையது என்று கனவு கண்டுகொண்டிருந்தார் பரூக். மக்கள் மனம் கொதித்து எழுந்தால், அவர்களைச் சுட்டுத் தள்ளிடப் பட்டாளம் இருக்கிறது தன்னிடம்; —பிறகு ஏன் கவலை? என்று புன்சிரிப்புடன் போக பூமியில் உலவிக் கொண்டிருந்தார்.

திடீரென்று, ஒரு நாள் அந்தப் புன்சிரிப்பு அழிந்தது.

கோவெனக் கதறினார் பரூக்!

எந்தப் பட்டாளத்தின் துணையைக் கொண்டு பரூக், மக்களின் புரட்சியை மட்டம் தட்டலாம் என்று மட்டற்ற ஆசைகொண்டிருந்தாரோ, அதே பட்டாளம் சீறி எழுந்தது சிறுமதிகொண்ட பரூக் மீது. போதும் உன்னுடைய அட்டகாசம் என்று வீர முழக்கமிட்டது. போ வெளியே என்று அந்தப் பட்டாளத்தின் சார்பில், தளபதி நாகூப், கட்டளையிட்டார் மன்னர் பரூக்குக்கு.

பரூக் வெளியேறினார் தன் நாட்டை விட்டு என்று சொன்னால் கூட அது முழு உண்மை ஆகாது. விரட்டியடிக்கப்பட்டார் பரூக் என்று கூறவேண்டும். அதுதான் உண்மை. பட்டாளம், மக்கள், இருவருமே ஒன்று சேர்ந்துகொண்டு, மமதையின் உச்சியிலே வெறியாட்டம் ஆடிக்கொண்டிருந்த மன்னரை நாட்டை விட்டே ஓட்டி விட்டனர்.

புதிய ஆட்சி ஏற்பட்டிருக்கிறது தளபதி நாகூப் தலைமையில்.

(41-ம் பக்கம் பார்க்க)

# கல்வியைப் பரப்புவதில் ரேடியோ, பிலிம் சாதனங்களின் உதவி

## காட்சி, கேள்வி மூலம் கற்றல் துறையிலும் சென்னைக்கே முதல் ஸ்தானம்

**ஸ்ரீ கே. ராகவ ரெட்டி**

கல்வியைப் பரப்புவதில் காட்சி, கேள்வி சாதன உதவியானது, கல்வி தோன்றிய நாளிலிருந்தே இருந்து வருவது. கருத்துக்களை வெளியிட பேச்சோ, எழுத்தோ போதிய அளவு அபிவிருத்தியடையாத நாளில் நமது மூதாதையர்கள், அடையாளங்கள், சின்னங்கள் மூலமாகத் தங்கள் கருத்தைத் தெரிவித்து வந்தார்கள். குகைகளிலே மிருகங்களின் சித்திரங்களை, அற்புதமாகப் பொறித்தது, புராதனமான கோயில்களான மதுரை, திருச்செந்தூர், பத்ராசலம், ஸ்ரீரங்கம் ஆகிய ஆலயங்களில் அதி அற்புதமான கல்வெட்டுகள், வேலைப்பாடமைந்த கண்ணாடிப் பலகணி உள்ள தாஜ் மஹால், குதுப்மினார் ஆகியன எல்லாம், நமது முன்னோர்களின் உள்ளத்தைக் கிளத்திய கருத்துக்கள், லட்சியங்களின் பிரதிமைகளேயாகும். இந்தப் புராதனமான சாஸனங்கள், வெகு காலமாகக் கல்வியூட்டும் சாதனங்களாக இருந்து வந்திருக்கின்றன. உலகத்தின் மற்றப் பாகங்களில் இத்தகைய முறை இருந்ததில்லை. இவை தவிர, கிராமக் கூத்துகள், நமது முன்னோர்கள் மந்திரம் ஓதிய முறை முதலிய கேள்வி முறைகள் எல்லாம் முன்காலத்தில் நம் தேசத்தில் கருத்துக்களையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு மிகவும் உதவி புரிந்து வந்திருக்கின்றன.

இந்தக் காலத்தில் தேசத்தில் கல்வியபிவிருத்தி ஏற்படுத்துவதில், காட்சிகளும் கேள்வியும் உதவும் முறையின் முக்யத்துவத்தை உபாத்தியாயர்கள் உணர்ந்தேயிருக்கிறார்கள். ஆனால் இதற்கான கருவி சாதனங்கள் மிகவும் சாதாரணமானவை. அவைகள் உபயோகமும் கிரம ரீதியாகவோ, திட்டமிட்ட முறையிலே இல்லை. தவிரவும் கல்வியைப் பரப்புவதில் இந்த முறைகள், கல்வி ஸ்தாபனங்களில் தேவையான அளவுக்கு உபயோகப்படுத்தப்படவில்லை.

### படங்களின் முக்கியத்துவம்

கல்வி போதனையில் படங்கள், பூகோள படங்கள், சித்திரங்கள், மாடல்கள் முதலியவற்றின் முக்கியத்துவம் இந்த நூற்றாண்டின் துவக்கத்திலேதான் பூரணமாக உணரப்பட்டது. பின்னர் படிப்படியாக மாஜிக் லான்டர்ண், 16 மில்லி மீட்டர் ப்ரொஜக்டர்கள் முதலியன உபயோகத்துக்கு வந்தன. அச்சடித்தல், புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல்

மற்றும் இதர தொழில் நுணுக்க முறைகளின் முன்னேற்றத்தினால் தான் இந்தக் காட்சி கேள்வி முறைகள், நமது பள்ளிகளிலே, புதிய புரட்சிகரமான முறைகளை ஏற்படுத்தின.

கல்வியில் காட்சி கேள்விமுறை உதவிக்கு இவ்வளவு முக்யத்துவம் கொடுப்பானேன்? குழந்தை உலகம் உணர்ச்சி சுழற்சி உலகம். தான் பார்க்கும், கேட்கும், தொட்டுணரும் விஷயங்களில் தான் குழந்தை சிரத்தைகொண்டிருக்கிறது. கல்வி ஞானங்களுக்கு அடிப்படையான உணர்ச்சி அனுபவங்களுக்குரிய பகைப்புலனை, காட்சி கேள்வி சாதனங்கள் ஏற்படுத்துகின்றன. இந்தச் சாதனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்ததன் பலனாக, கல்வி ஸ்தாபனங்களிலே, இவை, முன்பு எப்போதையும்விட இப்பொழுது அதிகமாக இருக்கின்றன. பள்ளி வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுவனவாகவும், கல்வி முன்னேற்றத்துக்கு உதவக்கூடியனவாகவும் அவை இருக்கின்றன.

## அங்கீகரிக்கப்பட்ட முறைகள்

கல்வியபிவிருத்தியில் காட்சி கேள்வி முறை உதவி வெகு காலமாக இருந்து வருகிறது என்றாலும், கல்வி சம்பந்தமாக "காட்சி கேள்வி மூலம் கற்றல்" என்ற பதப்பிரயோகம் வெகு சமீபத்தில்தான் உபயோகத்துக்கு வந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, காட்சி கேள்வி மூலம் கற்றல், மிகவும் அபிவிருத்தியடைந்து, பள்ளி கல்லூரி பாட திட்டங்களில் அது இப்போது அங்கிகரிக்கப்பட்ட ஒரு முறையாக இருக்கிறது. முதியோர் கல்வித்துறையிலும், இந்தச் சாதனம் நன்றாக வேரூன்றி விட்டது.

## சென்னையில் துரித முன்னேற்றம்

காட்சி கேள்வி மூலம் கற்பது என்பது சென்னை ராஜ்யத்தில் விசேஷ கவனம் செலுத்தப் பெறப்பெற்று, சென்ற இரண்டு ஆண்டுகளில் துரிதமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. 1947-ல் தான் ராஜ்ய சர்க்கார் முதல் தடவையாக, காட்சி மூலம் கல்வியில் திட்டமான நடவடிக்கை மேற்கொண்டார்கள். இத்துறையில் செய்யப்படும் விசேஷ சேவைகளுக்காக, மாணவர்களிடமிருந்து இதற்கென விசேஷ கட்டணம் வசூலிக்கவும் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், இவ்வகையில் போதிப்பது என்னும் வேலைகளைப் பொறுத்தவரை, விசேஷ லைசென்ஸ் பெற்றவர்களும் புரொஜக்டர், எலக்ட்ரிசிடி ஜெனரேட்டரும் சொந்தத்தில் வைத்துள்ளவர்களுமான தனிப்பட்ட சினிமா காட்சி காட்டுவோரிடமே, அவ்வேலை பிரதானமாக ஒப்படைக்கப்பட்டது.

கல்வி இலாகா டைரக்டரின் அங்கிகாரம் பெற்ற படங்கள் தான் காட்டப்படவேண்டும்: 1951-ம் வருஷம் மார்ச்சு மாதம்

வரை இந்த ஏற்பாடுகள் இருந்தன. தனிப்பட்ட சினிமா காட்சி காட்டுவோர், சினிமாப் படங்களைத் தவிர மற்ற எதிலும் சிரத்தை காட்டவில்லை. இந்தச் முறை நன்றாக வேலை செய்யாததாலும் மக்களுக்குப்பயன் அளிக்காததாலும், சர்க்கார் இதுபற்றிய கொள்கையைத் திருத்தியமைத்து, 1951-ம் வருஷம் மார்ச்சில், இந்த ராஜ்யத்தில் காட்சி கேள்வி மூலம் கல்வி போதிக்கும் பொறுப்பு பூராவையும் சர்க்காரே ஏற்றார்கள்.

## திருத்தப்பட்ட திட்டத்தின் முக்கியத்துவங்கள்

இந்த ராஜ்யத்துக்கான காட்சி கேள்வி மூலம் கற்றல் பற்றிய திருத்தப்பட்ட திட்டத்தின் முக்கிய அம்சங்களைக் கவனிப்போம். முன்னேற்றமடைந்துள்ள நாடுகள், இத்துறையில் விரிவாக நடவடிக்கைகள் எடுத்துவருவதையொட்டி, நம் ராஜ்யத்தில் செகண்டரி பள்ளிகளில், இந்த நவீன சாதனங்களில் மூன்று வைக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. மூன்று வருஷ காலத்தில் இந்தக் குறைந்தபட்சசாதனங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். அந்த சாதனங்கள் பின்வருமாறு :-

16 மில்லி மீட்டர் புரொஜக்டர் ஒன்று, 35 மில்லி மீட்டர் பிலிம்ஸ் டிரிப் புரொஜக்டர், ஒரு ரேடியோ.

பள்ளிகளுக்கு விசேஷ சலுகைவிலையில் இந்தச் சாதனங்களை சப்ளை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள விசேஷ காட்சி கேள்வி மூலம் கற்றல் நிதியிலிருந்து கிடைக்கும் தொகையைக் கொண்டுதான், இந்த சாதனங்கள் பெரும்பாலும் வாங்கப்படுகின்றன. முதலாவது பாரத்திலிருந்து மூன்றாவது பாரம் வரை உள்ள மாணவர்கள் வருஷம் ரூ 1-ம், 4-வது பாரத்திலிருந்து 6-வது பாரம் வரை படிக்கும் மாணவர்கள் வருஷம் ரூ. 2-ம் இந்த நிதிக்கு தரவேண்டும். சிற்சில கேசுகளில், இந்த சாதனங்களை வாங்க, பள்ளி மானேஜ்மெண்டாரும் உதவி செய்கிறார்கள்.

பள்ளிகளில் பழைய சாதனங்களான பூகோள படங்கள், இதர கருவிகள் முதலியன கவனிக்கப்படுவது போலவே, இந்த உபயோககரமான, மிக அதிகசெலவு பிடிக்கிற சாதனமும் விசேஷமாகக் கவனிக்கப்படுகிறது. பாடத்தோடு சேர்ந்தாற்போல; பாடத்துக்கு அனுகூலமான வகையிலே, இந்தக் காட்சிகள் காட்டப்பட வேண்டும் என்ற அம்சம் உபாத்தியாயர்களிடம் வற்புறுத்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பழைய சாதனங்களோடு, இந்த நவீன சாதனமும், பாடத்தை விளக்குவதில் ஒரு அம்சமாக, கருவியாக இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சலன படங்கள் உள்ள சினிமா புரொஜக்டரும், பிரதேச பாஷையில் பள்ளிகளுக்கான நிகழ்ச்சிகள் உள்ள ரேடியோ நிகழ்ச்சிகளும், வகுப்பிலே சொல்லித்தரும்

உபாத்தியாயர்களுக்கு, இரு ஒப்பற்ற உதவிகள் என்று சொல்லலாம்.

## காட்சி கேள்வி சாதனங்களும் நிகழ்ச்சிகளும்

ராஜ்யத்தில் தற்போதுள்ள சுமார் 1,400 செகண்டரி பள்ளிகளில், 300 பள்ளிகளில் 16 மில்லிமீட்டர் புரொஜக்டர்கள் இருக்கின்றன. 90 செகண்டரி பள்ளிகளில் 35 மில்லிமீட்டர் பிலிம்ஸ்டிரிப் புரொஜக்டர்கள் இருக்கின்றன. சுமார் 500 ஸ்தாபனங்களில் ரேடியோக்கள் இருக்கின்றன. ராஜ்யத்தின் பல்வேறு பாகங்களிலும் அவை உள்ளன. தற்போது பள்ளிகளுக்கான ரேடியோ நிகழ்ச்சிகள் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகியவைகளில் மட்டுமே இருக்கின்றன. ஆயினும் கூடியசீக்கிரத்தில் அகில இந்திய ரேடியோ கன்னட, மலையாள மொழிகளில் பள்ளிகளுக்கான நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது அகில இந்திய ரேடியோவின் பள்ளி நிகழ்ச்சிகள், பொருத்தமானவைகளாக இருக்கின்றனவா என்பதிலும் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. கல்வி சம்பந்தமான ஒலிபரப்புகளை ஏற்பாடு செய்வதில் கல்வி இலாகா பிரதிநிதிகளும் இந்த ராஜ்ய கல்வி நிபுணர்களும் நெருங்கிய சம்பந்தமுடையவர்களாக இருக்கிறார்கள்.

## மத்ய பிலிம் லைப்ரரி

கல்வி இலாகா டைரக்டர் ஆபிஸில் உள்ள மிகச் சிறந்த மத்ய பிலிம் லைப்ரரியைப்பற்றி இங்கு சில வார்த்தைகள் சொல்வது அவசியம். கல்வி ஸ்தாபனங்களில் உபயோகத்துக்காக பிலிம்களையும், பிலிம் ஸ்டிரிப்புகளையும் இந்த மத்ய பிலிம் லைப்ரரி தான் சப்ளை செய்கிறது. பிலிம் வாடகை கட்டணம் மிக சாதாரணமானது. பிலிம்களை வாடகைக்கு வாங்கி காட்டுவது மிகவும் பிரசித்தமாகவும் இருக்கிறது. கடைசியாக பதிவாகியுள்ள புள்ளி விவரங்களைக் கூறிவிடுவதென்றால், ஒரே நாளில் மட்டும் 95 பிலிம்கள் வாடகைக்கு விடப்பட்டன. தினம் சராசரி வாடகைக்குப் போவது 60 பிலிம்களாகும். பள்ளிகளில் அதிகமான புரொஜக்டர்கள் வேலைசெய்ய ஆரம்பிக்க ஆரம்பிக்க, இந்த பிலிம்களின் தொகையும் அதிகரிக்கும். மத்ய பிலிம் லைப்ரரியில் தற்போது சுமார் 1,000 கல்விப் படங்களும் சுமார் 600 பிலிம் ஸ்டிரிப்புகளும் இருக்கின்றன. கல்வி ஸ்தாபனங்களின் தேவைகளை சரிக்கட்டும் வகையில் இந்த லைப்ரரி விரிவுபடுத்தப்படுகிறது. சென்ற வருஷத்தில் சுமார் 8,000 பிலிம் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. இந்தியாவிலேயே கல்வி பிலிம்களில் நமது லைப்ரரி தான் மிகச் சிறந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## பள்ளிகளுக்கு பிலிம் லைப்ரரிகள்

பிலிம் லைப்ரரிகள் விஷயமாக மற்றும் ஒன்று. தாங்களே சொந்தமாக, காட்சி கேள்வி மூலம் கற்றல் நிதியிலிருந்து

பணம் ஏற்பாடு செய்துகொண்டு, தங்களுக்கென பிலிம் லைப்ரரிகள் ஆரம்பிக்க முயலும் பள்ளிகளுக்கு ஊக்கமளிப்பதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. காலக்கிரமத்தில், இத்தகைய லைப்ரரிகள் ஏற்படுத்திக்கொள்வது சில பள்ளிகளுக்கு சாத்யமாகலாம். அந்தப் பள்ளிகள் கல்வி இலாகா விதிக்கிற நிபந்தனைப் பிரகாரம், அந்தப் பிரதேசத்திலுள்ள மற்றப் பள்ளிகளுக்கு பிலிம்களை வாடகைக்குக் கொடுக்கலாம்.

பள்ளிகளில் உள்ள சினிமா புரொஜக்டர்களில், பெரும்பாலும் அவைகள் வகுப்பு உபாத்தியாயர்களாலேயே இயக்கப்படுகின்றன. இது விஷயத்தில் கருவிகளைக் கையாளும் பயிற்சி கிடைக்கச் செய்வதற்காக, உபாத்தியாயர்களுக்காக, கல்வி இலாகா, அவ்வப்போது பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றது. காட்சி கேள்வி கருவி சாதனங்கள் கிடைத்து விடுவதால் மட்டும், இந்த திட்டம் பரிபூர்ண வெற்றியடைந்து விடாது. இது விஷயமாக உபாத்தியாயர்கள், "இந்த புது திட்டத்தை மிக உற்சாகத்தோடு நடத்தி வருகிறார்கள் என்பனையும், இந்த திட்டத்தின் பலன் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்வதில், கல்வி இலாகாவுடன் பூர்ணமாக ஒத்துழைத்து வருகிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

## முதியோர் கல்விக்கு காட்சி கேள்வி கருவி சாதனங்கள்

இதுகாறும் செகண்டரி பள்ளிகளில் காட்சி கேள்வி கருவி சாதனங்களைக் கவனித்தோம். முதியோர் கல்விக்காகவும், அரசாங்கம் காட்சி கேள்வி கருவி சாதனங்களைப் பயன்படுத்துகிறது என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். முதியோர் கல்வி காரியங்களுக்காக, மத்ய பிலிம் லைப்ரரியில் சுமார் 200 பிலிம்கள் இருக்கின்றன. ராஜ்ய முதியோர் கல்வித் திட்டத்தில் இவை அவ்வப்போது உபயோகப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக மோட்டார் வான்கள் உதவியுடன் இவை காண்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மோட்டார் வானிலும் ஒரு 16 மில்லிமீட்டர் புரொஜக்டர், ஒரு ரேடியோ, இதர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வான்கள் ராஜ்யத்தின் பல்வேறு பாகங்களிலுமிருந்து இங்கும் அங்கும் சென்று தொண்டு புரிகின்றன. பள்ளிகளின் டிப்டி இன்ஸ்பெக்டர் பொறுப்பில் இவை வைக்கப்பட்டிருக்கின்றன. முதியோர் கல்வி இயக்கத்தில் இந்த மோட்டார் வான்கள் மிகவும் உபயோககரமாக இருக்கின்றன. கல்வி இலாகா டைரக்டரின் பொறுப்பில் இது இருந்து வருகிறது.

ராஜ்யத்தில், காட்சி கேள்வி மூலம் கல்வி அபிவிருத்தி பற்றி சுருக்கமாகக் கூறினேன். நான் சுருக்கமாகச் சொன்னது போல,

சென்றவருஷத்தில் சென்னை ராஜ்யம் இத்துறையில் பெரிதும் முன்னேறியிருக்கிறது. கல்வியைப் போதிப்பதிலும் பள்ளி அறைப் படிப்புக்கு தகுந்த ஒத்தாசை செய்வது என்ற முறையிலும், மிகச் சிறந்த ஒரு கருவியை, இப்பொழுது நூற்றுக்கணக்கான உபாத்தியாயர்கள் கையாளுகிறார்கள். உபாத்தியாயர்களின் கடமை மிகப் புனிதமானது. நவீன போதனா சாதனங்களை இப்பொழுது உபாத்தியாயர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். கல்வி அபிவிருத்தித் திட்டத்தை அமுல் புரிவதில் திட்டமான நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம் என்று துணிந்து கூறலாம்.

[சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் 1952-ம் ௵ செப்டம்பர் ௴ 6-ந் தேதி ஒலிபரப்பப்பட்டது.]

(சென்னைச் செய்தி)

---


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

சென்ற இதழ் தொடர்ச்சி —

# கிராமச் சீரமைப்பும் குடிசைத் தொழிலும்

By. J. Russaliah B. A. Rural welfare offiicer Tiruvellore (Copyright by the Publisher)

ஒருவர் தேனீ வளர்க்கத் தேர்ச்சி பெற்றிருந்தால் அல்லது கோழி வளர்க்க விருப்பம் உடையவராக இருந்தால் அவைகளை எந்தக் குடிசைத் தொழில் எந்த இடத்தில் எவருக்குப் பொருந்தும் என்பதை ஆராய்ந்து தேர்தல் வேண்டும். அவைகளை ஒரு வறண்ட பகுதியில் அல்லது கோழி முட்டைகளை விரும்பாத ஓர் இடத்தில் நுழைக்க முயற்சி செய்வது மடமையாகும். ஏற்கனவே அந்த இடத்தில் எந்தெந்தக் குடிசைத் தொழில்கள் நடக்கின்றன, அல்லது எவை நடத்தக் கூடியவை, மக்களின் விருப்பம், மனப்பான்மை, வசதிகள் எவைகள், எத்தொழில்கள் ஆரம்பித்தால் வெற்றியுற நடத்த முடியும் என்னும் இக்காரியங்களை உய்த்து உணர்ந்து ஏற்ற குடிசைத் தொழில்களை நிறுவல் வேண்டும். இன்றேல், அங்கு இருப்பவைகளை அபிவிருத்தி செய்யல் வேண்டும்.

9. எந்தக் காலங்களிலும் செய்யக் கூடியவையாக இருப்பது நன்று. கோடை அல்லது மாரி காலம் தடையாக இருத்தல் கூடாது. நூல் நூற்றல் எக்காலத்திலும் செய்ய முடியும். உபயோகப்படும் பொருள் செய்வது பயன் தரும். ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய உபகரணங்கள் அல்லது கருவிகள் மூலம் செய்ய ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

ஆலைச்சரக்குகள் மலிந்த இக்காலங்களில் குடில் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்கள் போட்டியிட்டு விற்பனை செய்ய முடியுமா? என்பது ஓர் பிரச்சினை. அப்படியிருப்பினும் இப்பொருள்களுக்கும் ஓர் இடம் உண்டு. இவைகளை நாம் ஆலைப்பொருள்கள் உடன் ஒப்பிடுவது ஏற்றதன்று. ஆலைப்பொருள்களின் மதிப்புவேறு. கையினால் செய்த பொருள்களின் மதிப்பு வேறு. ஆலைப்பொருள்களின் தன்மை வேறு. வீட்டுப் பொருள்களின் தன்மை வேறு. வீட்டுப் பொருளை உபயோகிப்பதற்குப் பதிலாக ஆலைப்பொருளை உபயோகிக்க முடியாது. யந்திரத்தால் பாலும் முட்டையும் தேனும் உற்பத்தி செய்தல் முடியாது. ஆகவே கைப்பொருள்கள் சிறந்தவை என்பதை நம் மனத்தில் பதித்தல் வேண்டும். இவ்வாறு குடில் தொழில்கள் பயக்கும் நன்மைகள் பல.

1. நமக்கு வேண்டும் பொருள்களை நாமே உற்பத்தி செய்கின்றோம்.

2. வீண் பொழுதுபோக்கும் சமயத்தைப் பயன் பெறச் செய்கின்றோம்.

3. பொருளாதார நிலைமையில் நாம் முன்னேற இது ஒரு முறையுமாகும்.

4. நமது கிராமங்களின் வாழ்க்கைத்தரம் உயர்வுபெற ஏற்ற ஓர் வழியுமாகும். சரியான உணவு ஒருவன் அருந்த வேண்டும். பால், மோர், தயிர், வெண்ணெய், முட்டை, தேன் முதலியன தேவை. உயர்ந்த விலைக்கு இவைகள் விற்கப்படுகின்றன. ஏழை கிராமவாசி வாங்கிப் புசிப்பது எங்ஙனம். ஆனால் அவன் தனது வீட்டில் பசு, கோழி, தேனீ முதலியன வளர்த்தால் அவனுக்குப் போதிய அளவு சுலபமாகக் கிடைக்கும்.

5. குடிசைத் தொழில்கள் கிராமவாசியின் சோர்வை நீக்கிப் புத்துயிர் அளிக்கும். ஒன்றும் செய்யச் சக்தியில்லை என்று எண்ணி எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தை எதிர்நோக்கியிருக்கும் மனப்பான்மை அகன்று, சோர்வு நீங்கி, மனவெழுச்சியும் ஊக்கமும் உண்டாகும். கவலையுற்றிருக்கும்போது தேனீக் கூட்டைத் திறந்து பார்த்தால் கவலை நீங்கும். சோர்வும் கவலையுமே மனித வாழ் நாட்களைக் குறைக்கின்றன. ஏதேனும் ஒரு குடிசைத் தொழிலை மேற்கொள்ளுபவர் முகமலர்ச்சியுடன் பல்லாண்டு வாழ்வார் என்பது அறிஞர் துணிபு. ஒரு பெரியார் கூறுகின்றார். "நான் என்னுடைய விடுமுறை சமயத்தை தேனீ வளர்ப்பதில் செலவிடுகின்றேன். எனக்கு வேண்டிய வேலைகளை நான் செய்து கொள்கிறேன். ஆகையால் தான் நான் இவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறேன்" அவருக்கு வயது எண்பத்துநான்கு. ஆக இத்தகைய சீரும் சிறப்பும் பெற்றது குடிசைத் தொழில். இதை நாம் நன்கு உணரல் வேண்டும். நம் கிராமங்கள் உயர்வுபெற வேண்டின் கிராமத் தொழில்கள் வேண்டும். நாம் உயர்வுபெற வேண்டின் நம் கிராமங்கள் சீர்பெற வேண்டும். நம் நாடு செழித்தோங்கவேண்டின் நம் கிராமங்கள் முன் வளரவேண்டும். கிராமங்களில் சிதைந்துபோன குடில் தொழில்கள் மறுமலர்ச்சி அடைதல் வேண்டும். அப்போது கிராம வாழ்வு திருந்தியமையும். கிராமத்தில் புத்துயிர் தோன்றும். கிராமங்களில் மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவும். இன்றைய கிராமங்களில் தெள்ளரிக்கும் பூச்சி போன்ற பல தீய பழக்கவழக்கங்கள் மாறும். கிராமங்கள் சீரும் சிறப்பும் எய்தி மாண்புறும்.

சில குடிசைத் தொழில்களின் பெயர் அடியிற் குறிப்பிடப்படுகின்றன. பால் மாடு வளர்த்தல், நூல் நூற்றல், நெசவு செய்தல்,

கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பாலாடு வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், துணிகளில் பூவேலை செய்தல், கயிறு திரித்தல், பாய், கூடை, பிரம்பு, நாற்காலி முதலியன செய்தல், தின்பண்டங்கள் செய்தல், மா செய்தல், (Malt) கால் மேல் ஜோடு தைத்தல், மூங்கில் பொருள்கள், பிரம்புப் பொருள்கள் செய்தல், கம்பளி சமுக்காளம் நெய்தல், கோரைப்பாய் நெய்தல், மா அரைத்தல், நெல் குற்றல், வெல்லம் காய்ச்சுதல், காகிதம் செய்தல், இன்னும் பல.

ஒரு கிராமவாசி சாதாரணமாக ஆறு குடிசைத் தொழில்கள் அறிந்திருப்பது நன்று. ஒருவனின் வருவாய் ரூ. 60% என்றால் அவன் ஆறு உப தொழில்கள் செய்தால் சராசரி ஒவ்வொன்றிற்கும் ரூ. 10% வீதம் ஆதாயம் கிடைப்பின் அவனுடைய ஆண்டு வருவாய் இரட்டிப்படையும். தேசிய உற்பத்தி பெருகும். தேசிய ஆரோக்கியமும் வளரும். நாட்டில் பொருள் மிகுதியாகும். பஞ்சம் நீங்கும். இன்று நம் நாட்டை அரிக்கும் இன்னல்கள் அகலும், நாடு செழிக்கும்.

## கிராமப் பிரச்சினை

நம் நாடு கிராமங்கள் நிறைந்த நாடு. எழுபத்தைந்து லட்சம் கிராமங்கள் உள்ளனவாகக் கணக்கறிஞர் மொழிகின்றனர். பூமி நூல் வல்லார் நம் நாடு பெரிய அகன்ற நாடு என்கின்றனர். உலகத்தில் வாழும் மனிதர்களில் ஐந்தில் ஒரு பகுதி நம் நாட்டில் உறைகின்றனர். பல மொழி பேசுபவர், பல மதக்கொள்கையுடையவர், பல நிறமுடைய மக்கள் நம் நாட்டில் வதிந்து வருகின்றனர். குளிர் வெப்ப தட்ப நிலை பல்வேறு இடங்களில் பல விதத்தில் காணப்படுகின்றது. மலைகள் ஆறுகள் மலிந்து கிடக்கின்றன. ஆடு முதல் யானை ஈறாக உள்ள மிருகங்களைக் கொண்டது நம் நாடு. விதம் விதமான பூபரப்பையுடையது நம் நாடு.பருத்தி விளையும் கரிசல் நிலங்களையும் நெல் விளையும் ஆற்றுப் பாசனங்களையும் உடையது. செவ்வல் நிலங்களும், பலவகைக் கனி மரங்கள் செடிகள வளரும் நிலங்களும் ஆங்காங்கு செறிந்து கிடக்கின்றன. சூரியனது சக்தி வேண்டி நிற்கும் நாடு. மனித சக்திக்கு எல்லை இல்லை. இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற நம் நாடு இன்று அன்னமின்றி அலைகிறது. காரணம் யாதெனின் பல ஆண்டுகளாகக் கிராமத்தைக் கவனிப்பார் இல்லை. பட்டணங்களில் வசிப்போருக்கு வேண்டும் வசதிகள் செய்யப்பட்டன. ஆனால், கிராமவாசி மறந்து கைவிடப்பட்டான். கிராமங்களில் வசிப்போர் எண்பத்தொன்பது சதவிகிதம். எஞ்சிய சிலரே நகரங்களில் வாழ்கின்றனர். இந்தக் கிராமவாசியே நாட்டைத் தாங்குகின்றவன். இவனுடைய நிலையே இன்றைய பிரச்சினை.

நம் நாட்டின் உயர்வு தாழ்வு கிராமங்களைச் சார்ந்து இருக்கின்றது. கிராம நிலையே நாட்டின் நிலையாகும். கிராமப் பிரச்சனையே இந்தியப் பிரச்சனையாகும். கிராம பிரச்சனைகள் தீர்ந்தால் இந்திய பிரச்சனைகள் தீரும். சில நகரங்கள் சீர் பெறுவதால் இந்தியா உயர்வு பெறாது. இந்தியா உயர்வு பெறவேண்டின் கிராமங்கள் உயர்வு பெற வேண்டும். நம் கிராமங்களின் அல்லல்களை நம் நாட்டின் துன்பங்களாக மதித்தல் வேண்டும். நம் கிராமங்கள் எந்நிலை எய்துகின்றனவோ அந்நிலை அடையும் நம் நாடு. நம் கிராமங்களில் சீர்குலைந்து போன பல நல்ல பண்புகள் திரும்பவும் சீர் அமைக்கப்படும்போது நம் நாடு புகழுடன் திகழும்.

பட்டணங்களில் உறையும் மக்களுக்கு உணவு அளிப்பவர் கிராமவாசிகள், நகரங்களிலுள்ள ஆலைகளுக்கு கூலியாட்களை அனுப்பி உதவுவதும் கிராமங்களே. அங்குள்ள ஆலைகளுக்குக் மூலப்பொருள்கள் உற்பத்தி செய்வது கிராம வாசிகள். ஆலைகள் தரும் பொருள்களைப் பெறுவதும் கிராமவாசியே. ஆக கிராமவாசியின் உயர்வு தாழ்வைப் பொறுத்துத்தான் பட்டண வாசியின் நிலைமை இருக்கின்றது. ஆகவே கிராமங்கள் வாழ்ந்தால்தான் பட்டணம் வாழ முடியும். நகரவாசியின் பிரச்சனையை விட கிராமவாசியின் பிரச்சனை முக்கியம் வாய்ந்தது. சில பிரச்சனைகளைச் சிறிது கவனிப்போம்.

1. **ஆகாரக் குறைவு** : கிராமங்களில் அரை வயிற்றுக்கும் கஞ்சியில்லாதவர்கள் எத்தனையோ பேர். மத்தியானம் உணவின்றிப் பள்ளியில் படிக்கும் கிராமச் சிறுவர் சிறுமியர் பலர். பாலருசித் தறியாத சிறுவர் பலர். ஒரு மனிதன் ஆரோக்கிய வாழ்வு செய்ய இவ்வளவு உணவுப் பொருள்கள் அவன் அருந்த வேண்டும் என வைத்திய நிபுணர் மொழிகின்றனர். சரியான உணவு கிடைப்பதைவிட போதுமான உணவு கிடைப்பதே வயிறு நிரம்ப உண்பதே கிராம பிரச்சனையாக இருக்கின்றது. 1939-ம் ஆண்டு கணக்குப்படி 73 லட்சம் டன் தானியங்களும் பயறும் விளைந்தால் போதுமானது என்று ஒருவர் கூறுகின்றார். ஆனால், அவ்வாண்டில் விளைந்தது $62\frac{1}{2}$ லட்சம் டன். ஆக கணக்குப்படி 28% மக்களுக்கு உணவில்லை. இப்போது இந்நிலை மோசமாக இருக்கிறது என்பது பொருந்தும்.

கணக்குப்படி ஒரு அமெரிக்கன் 3500 கெலோரி (Calorie) சூடு கொடுக்கக் கூடிய உணவு அருந்த வேண்டும். குளிர்ந்த நாடுகளில் வசிப்பவர்கள் சூடான நாடுகளில் வாழ்பவர்களைவிட அதிகம் சாப்பிட வேண்டும். நம் நாட்டிம் வசிப்பவர் 2800 கெலோரி சூடு கொடுக்கக் கூடிய அளவு உணவு போதும் என்கிறார்கள் நிபுணர்கள். அப்படி கணக்குப் பார்ப்பினும் நபர் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ ராத்தல் அரிசியும்

பருப்பும் மற்றப் பொருள்களும் தேவை. இவை கிடைக்கின்றனவா என்பதுவே பிரச்சனை.

வெறும் சோளக் கூழ் மட்டும் உண்டு காலம் கடத்துபவர் பலர். சில நாள் பட்டினி இருப்பவர் பலர். ஒரு வேளை உண்பவர் பலர். "பசிவந்திடப் பத்தும் பறந்து போகும்" ஆக இது முக்கியமான பிரச்சனை, இப்பிரச்சனையே மற்றெல்லாப் பிரச்சனைகளுக்கும் அடிப்படையானது. ஆகவே, இதுவே நம் சிந்தனைக்குரிய முதற் பிரச்சனையாகும்.

2. **போதிய அளவு ஆடையின்மை:** மதுரை ஜில்லாவில் கள்ளர் பாடசாலைகளில் சிறுவர்கள் கோவணமும் கட்டிக்கொண்டு வருவதைப் பார்க்கலாம். இரண்டு சேலை வைத்திருக்கும் பெண்கள் எத்தனை? தங்களுடைய ஒற்றைச் சேலையை ஊருணியில் அல்லது கிணறுகளில் துவைத்து ஒரு பகுதியை அரையில் கட்டிக்கொண்டு மறு பகுதியை உலர விட்டு உடுப்பது பலர் வழக்கம். ஒரு நுனி சிறு குழந்தைக்குத் தொட்டிலாகவும் மறு அற்றம் தனக்கு உடையாகவும் உபயோகிப்பது சிலர் முறை.

ஒரு நபருக்கு 36 கெஜம் துணி ஒரு ஆண்டில் வேண்டும் என்று ஒரு வகுப்பினர் கருதுகின்றனர். நம் கிராமவாசியின் நிலை இதில் ஐந்தில் ஒரு பங்கு என்பது மிகையாகாது. அர்ஜென்டினவிலுள்ள (Argentina) ஒரு நபர் ஆண்டு ஒன்றிற்கு 38 கெஜம் துணி உபயோகிக்கின்றான். தென் ஆப்ரிக்கா நபர் 23 கெஜம் உபயோகிக்கின்றான். நம் நாட்டின் அளவு மிகக் குறைவு.

போதிய ஆடை இல்லாததனால் ஏற்படும் நோய்கள் பல. நோய்களைத் தாங்கும் சக்தியும் குறைந்து போகின்றது. "ஆடையுடையான் சபைக்கு அஞ்சான்" என்பது பழமொழி. ஒரு கிராமவாசி ஆற்றலிலும் அறிவிலும் மேம்பட்டவன் ஆயினும் அவனது ஆடை காரணம் பற்றி ஒதுக்கப்படுகின்றான். அவனுடைய புத்தியை நன்கு மதிப்பதும் இல்லை. "இரக்கச் சென்றாலும் சிறக்கச் செல்ல வேண்டும்" என்றார் ஒருவர். கிராமவாசி சிறப்படைய வேண்டியது இன்றோர் முக்கியமான பிரச்சனை.

3. **ஏற்ற வீடு இல்லை:** சரியான வீடு இல்லாதது பட்டணங்களில் மட்டு மல்ல கிராமங்களிலும் கருத வேண்டிய ஓர் பிரச்சனையாகும். கள்ளர் கிராமங்களில் இது மிகவும் தேவையான பிரச்சனை. ஆடு மாடுகள் சமையல் எல்லாம் ஒரே இடத்தில் இருப்பது சாதாரணம். வீடுகளில் படுக்க வேண்டியவளவு வசதி கிடையாது. 1937-ல் நான்கு ஊர்களில் எடுத்த கணக்குப்படி 98% வீடுகள் மண் சுவரால் கட்டப்பட்டவைகள். 93% வீடுகள் சோளத் தட்டையால் வேயப்

பட்டவை. 98·5%. வீடுகளுக்கு சன்னல்கள் இல்லை. 71·6% வீடுகளுக்கு கதவுகள் கிடையாது. நபர் ஒன்றுக்கு இடம் 15 சதுர அடி.

வீடுகளில் படுப்பதற்குப் போதுமான இடம் இல்லாததால் ஆண்கள் மந்தைகளிலும் சாவடிகளிலும் இரவு தூங்குகின்றனர். கள்ளர் நாட்டுக் கிராமங்களில் திருட்டுத் தனம் அதிகமாக இருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். ஒரு சிறுவன் இளம் வயதிலேயே தாய் தகப்பனுடைய பாதுகாவலின்றி சுயேச்சையாக வெளியிடங்களில் படுக்கிறான். அங்கு நல்ல நண்பர்களும் தீய தோழர்களும் இருப்பார்கள். இராக்காலங்களில் சிறுவன் கவனிப்பாரின்றி மனம் போல் வாழ ஆரம்பிக்கின்றான். அவன் தீய பழக்க வழக்கங்களில் தன் கருத்தைச் செலுத்த ஏற்ற வசதிப்புகளை அடைகின்றான். ஆக இதுவே அவன் சீர்குலைய வழிகாட்டுகின்றது. கள்ளர் நாட்டுக் கிராமங்கள் சீர்பெற வேண்டின் அக்கிராமங்களில் தகுந்த வீடுகள் அமைக்கப்பட வேண்டும். ஏற்ற வீடுகள் அமைக்கப்படுவதனால் பல சமூக சீர்கேடுகளும் நீங்கும். வேறெந்த முறைகளாலும் அடக்கு முறைகளாலும் இந்தியா உயர்வுபெற இயலாது.

ஒரு நபருக்கு வேண்டியது 100 சதுர அடி எனச் சிலர் கருதுகின்றார்கள். அப்படியானால் கள்ளர் கிராமங்கள் நிலை கவனிக்க வேண்டியதொன்றாகும். வீட்டிற்கு இடவசதி மட்டுமன்றித் தண்ணீர் வசதி முதலியனவும் வேண்டும். சிறையில் கிடைக்கும் இடம் கூடக் கிடைப்பதில்லை என்றால் வருந்தத் தக்கது.

4. ஆண்டு முழுவதும் வேலை செய்யத் தகுந்த நிலம் கிடையாது. நிலங்கள் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் பல பாகங்களில் சிதறிக் கிடக்கின்றன. சில இடங்களில் நிலங்கள் மிகச்சிறிய அளவில் இருப்பதால் ஏர் உழத் தகுந்தவையல்லாமல் இருக்கின்றன. நிலங்களுக்கு வேலிகள் கிடையா. வேலிகள் போடுவதும் அதிகச் செலவு. சில இடங்களில் போடவும் முடியாது. வேலிகள் இல்லாததினால் மாடுகள் ஆடுகள் முதலியவற்றாலும் வண்டிபாதைகள் செல்வதாலும் ஏற்படும் பயிர்ச் சேதம் மிகுதி. புதிய முறைகளைக் கையாண்டு பயிர் செய்யும் வகையும் இல்லை.

5. போதுமான வருவாய் கிடையாது. ஆண்டிற் கிடைக்கும் வருமானம் கொண்டு குடும்பம் கடனில்லாமல் வாழ முடியாது. சேமித்து வைக்க மீதம் இல்லை. மழை பெய்யாததால் பயிர் விளைவதில்லை. பயிர் விளையாவிட்டால் சோற்றுக்குக் கடன் வாங்க வேண்டும். கடன்காரன் வலையில் சிக்கி அவதியடைகின்றான். கிராமவாசியின் வருவாய் உயர்தல் அவன் உயர்வதற்கேற்ற ஓர் முறையுமாகும்.

6. பல நோய்கள் அவனைத் துன்புறுத்துகின்றன. நோய்கள் தாங்கும் சக்தி குன்றிக் காணப்படுகின்றான். சிசு மரணங்கள் அதிகம். நல் ஆரோக்கியமின்மையே இதற்குக் காரணம்.

7. ஆடு, மாடு, கோழி இவைகளின் தன்மை மிகக் குறைந்த ரகம். சரியான பாதுகாப்பில்லை, தகுந்த ஆகாரம் இல்லை. அவைகளைக் கட்டுவதற்கு வேண்டிய தொழுவங்கள் கிடையா.

எரு சேமிக்கும் முறை மிகவும் மோசமானது. கண்ட கண்ட இடங்களில் குப்பைகள் கூளங்கள் குவியல் குவியல்களாகக் கொட்டப் படுகின்றன. சாணியை எருத்தட்டி எரிக்க உபயோகிக்கின்றனர். உலர்ந்த எரு காற்றினாலும் வெள்ளத்தினாலும் சேதமடைகின்றது. வெறும் சக்கைதான் தோட்டத்தில் எருவாகப் போடப்படுகிறது. நல்ல எருப் போட்டால் விளைச்சலும் அதிகமாகும்.

8. ஊர்களில் கக்கூஸ் இல்லை. நடை பாதைகள் ஓரங்களிலும் ஊர்களின் சமீபத்திலும் மல விமர்சனம் செய்கின்றார்கள். இராக் காலங்களில் காரில் போகும்போது ஊருக்குப் பக்கத்தில் வந்திருப் பதற்கு அறிகுறி துர்நாற்றமே. இதைக் குறித்து அவர்கள் அக் கரைப் படுவதும் இல்லை. இந்தப் பிரச்சனைக்கும் தகுந்த மாற்றம் தேடவேண்டும். பல நோய்கள் பரவுகின்றன. நல்ல எரு வீண் விரயம் செய்யப்படுகின்றது.

9. எல்லாவற்றையும் அரசாங்கம் செய்யவேண்டும் அல் லது பிறர் செய்யவேண்டும் என்னும் சிறு குழந்தை மனப்பான்மை ஒரு பெரும் பிரச்சனையாகும். தங்களுக்கும் ஆற்றல் உண்டு என் பதை மறந்து வாழ்கின்றனர். எந்தச் சிறிய காரியம் என்றாலும் அர சாங்கம் வரவேண்டும். இன்றைக்கு விதைக்க வேண்டும். நாளைக்கு அறுவடையாக வேண்டும் என்னும் மனப்பான்மை சில இடங்களில் நிலவுகின்றது. காசு இருந்தால் மற்றவர்களை வீண் வம்புக்கு இழுப் பதும், பஞ்சாயத்து வைப்பதும், கெடு வைப்பதும், ஒரு நாட்டிற்கு ஏற்றி வைப்பதும், அலைக்கழிவு செய்வதும் சிலருடைய மகிழ்ச்சி. இந்த மனப்பான்மை மாறி உயரிய பண்புகள் சிறந்து விளங்க வேண்டும்.

போக்கு வரவுவசதியின்மை; பொருள்களை விற்பனை செய்யத் தகுந்த சௌகரியங்கள் இன்மை போன்ற இன்னும் பல பிரச்சனை கள் கிராமங்களை வதைக்கின்றன. நல்ல தண்ணீர் குடிப்பதற்கும் உழுவதற்கும் இல்லாது படும் பாடு சொல்லும் தரத்ததன்று. இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பான்வேண்டி எடுத்துக்கொண்ட முயற்சியே கிராமச் சீரமைப்பாகும்.

## கிராமப் பொருளாதார ஆராய்ச்சி

நம் நாட்டில் பற்பல இடங்களில் பலர் பொருளாதார ஆராய்ச்சி நடத்தியிருக்கின்றனர். இன்னும் பெரும்பான்மையான இடங்கள்

இவ்வித ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. தகுந்த முறையில் ஓர் ஆராய்ச்சி நடத்தினால்மட்டுமே முக்கியமாக நம் நாட்டுக் கிராமங்களின் உண்மை நிலை தெரியவரும். சரியான குறிப்புகளும் கணக்குகளும் இல்லாததனால் கிராமங்களைக் குறித்துப் பலரும் பல விதமாகச் சொல்லுகின்றனர். தற்பொழுது கிராமச் சீரமைப்பு இயக்கம் அதிகமாக உரையாடப் பட்டு வருகின்றது. ஆனால் உண்மையான கிராம நிலை எவேயோர்களுக்குத் தெரியாது. பலரும் கிராம மக்கள் ஏழைகள் என்று சொல்லி விடுகின்றனர். ஆனால் ஏன் ஏழைகள், எவ்வாறு எளிமையானார்கள் என்ற காரணம் பற்றித் திட்டவட்டமான கூற்று இல்லை. திட்ட வட்டமாக எடுத்துரைக்க வேண்டின் ஒழுங்கு படுத்தப்பட்ட ஆராய்ச்சி வேண்டும்.

மேலும் நம் நாடு உயர்வு பெற நம் கிராமங்களைக் குறித்த திட்ட வட்டமான அறிவு நமக்கு வேண்டும். கிராம வாசிகளின் தேவைகள் எவையென அறிதல் வேண்டும். அவர்களுடைய தேவைகளையும், ஆற்றல்களையும், தருணங்களையும், நிலைமையையும் கவனிக்காது கிராமச் சீர்திருத்தம் என்று நமக்கு விருப்பமான காரியங்களைக் கிராமங்களில் கொண்டு நுழைப்போமானால் அவை நிலை நிற்கா. ஆகவே ஒரு விரிவான ஆராய்ச்சி நடத்தினால் மட்டும் உலகிலேயே மிகப் பழமையான இக் கிராமங்களை நாம் நன்கு மதித்து அங்குக் காணப் படும் குறைபாடுகளை நீக்க நாம் முன் வருவோம்.

ஒரு வைத்தியன் ஒரு நோயாளிக்கு மருந்து கொடுக்கு முன் அவனுடைய நோய் யாது எனத் தெளிவுற அறிதல் வேண்டும். அது போன்று நம் நாடு உயர்வுபெற வேண்டுமென்று விரும்பும் எவரும் நம் நாட்டுக் கிராமங்களின் நிலை குறித்துச் சரிவர அறிதல் வேண்டும். நம் நாட்டின் பல கிராமங்களும் பற்பல தன்மை உடையனவாக இருக்கின்றன. நம் நாட்டின் மக்களில் 89% கிராமங்களில் வசிக்கின்றனர். ஆக கிராமங்களுக்கே முதல் இடம் தரப்பட வேண்டும். ஒரு கிராமத்திற்கும் மற்றோர் கிராமத்திற்கும் பல ஒற்றுமைகள் வேற்றுமைகள் உள. கிராமங்களின் தேவைகள் ஒன்றிற்கொன்று வேறுபட்டிருக்கலாம். ஒரு கிராமத்திற்கு ஏற்கும் முறைகள் அடுத்த கிராமத்திற்கு ஏற்கா. ஆகவே நமக்குச் கிராமங்களைக் குறித்த நல்லறிவு இருந்தால் தான் நாம் நல்லாலோசனை கூற முடியும். எல்லாக் கிராமங்களிலும் ஒரே விவசாயம் செய்யப்படுவதில்லை: சில இடங்களில் நெல் சாகுபடி செய்கின்றார்கள். சிலர் கரும்பு விவசாயம் செய்கின்றனர். இன்னும் சிலர் பருத்தி சோளம் முதலியன உற்பத்தி செய்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவருடைய பிரச்சனையும் வேறு வேறு. தேவைகள் பழக்க வழக்கங்கள் இன்ப துன்பங்கள் வேறு வேறு.

(தொடரும்)

# அறிஞர் வாயுரை

(தென்னுப்பிரிக்கா–டர்பன்–திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

அஜாக்கிரதையாயுள்ள மனிதன் எந்தக் காலத்திலும் கர்வ விதையை விதைத்து, ஏக்கப் பயிரை அறுக்கிருன்.

— கெய்டே

ஒரு மனைவியினுடைய அன்பான பார்வையில், பசுமையான தோட்டங்களைப் பார்க்கலாம். அவளுடைய தூய்மையான இருதயத்திலே ஞான நூல்களையெல்லாம் காணலாம்.

— கௌலி

எவனொருவன் சிறிதென்றும் பெரிதென்றும் வித்தியாசம் பாராமல், எல்லாவற்றினிடத்தும் அன்பாக நடந்து கொள்கிருனே, அவன் தான் உண்மையான பக்தனுகிருன்.

— ஷெல்லி

புகழ் பெற வேண்டுமென்ற எண்ணமொன்றுதான், நமது வாழ்க்கையில் எல்லாவிதமான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ளக் கூடிய ஓர் ஆற்றலை நமக்கு அளிக்கிறது.

— மில்டன்

முதலில் தேகாரோக்கியம். அடுத்தது அழகு. அதற்கடுத்தது நல்ல வழியில் சம்பாதித்த பணம். கடைசியானது நண்பர்களிடையே காலங் கழித்தல்.

— சைமோனடைஸ்

நாம் யார்? அலைந்து கொண்டிருக்கும் காற்றின் குரல்கள். அந்தக் காற்று, ஓய்வு வேண்டுமென்று அலைகிறது. ஆனுல் ஓய்வு காண்பதில்லை. அப்படித் தான் மானிட வாழ்க்கையும் இருக்கிறது.

— சர் எட்ஷன் ஆர்னல்ட்

ஒரு மனிதனுடைய வாழ்க்கையை அளக்க முடியும். எப்படி? நீளத்தினுல் அல்ல; ஆழத்தினுல். காலத்தினுல் அல்ல; எண்ணத்தினுலும் செயலினுலும்.

— கேல்வின்

உன்னுடைய இருதயம் பரிசுத்தமானதாயிருந்தால், ஒவ்வொரு பிராணியையும் நீ கண்ணுடி போல் பார்க்கலாம். ஒரு பெரிய நூலிலிருந்து என்னென்ன பாடங்களைக் கற்றுக் கொள்ளலாமோ, அத்தனை பாடங்களையும் நீ அதனிடமிருந்து கற்றுக் கொள்ளலாம்.

— தாமஸ் அகெம்பிஸ்

சென்ற இதழ் தொடர்ச்சி —

# அறிவாலயம்

## ஓர் தமிழ் நாடகம்

[தெ. பா. சம்பந்தன்]

### நாடக உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| வேலாயுதம் | — | ஓர் ஏழை |
| செட்டியார் | — | கடன் கொடுப்பவர் |
| தனபாலர் | — | ஓர் பணக்காரன் |
| கணபதி ஐயர் | — | தனபாலர் நண்பன் |
| இளங்கோ | — | தனபாலர் மகன் |
| சேரன் | — | வேலாயுதம் மகன் |
| கனகம் | — | வேலாயுதம் மகள் |

### காட்சி 3.

இடம் :—வேலாயுதம் வீடு.

**வேலாயுதம்** :—வாருங்கள், வாருங்கள்... இப்படி உட்காருங்கள். இதோ (வெற்றிலைத்தட்டை நகர்த்துகிறார்.) வெற்றிலை போட்டுக் கொள்ளுங்கள். உம்....வந்து... உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமா இருக்கிறதே.

**தனபா** :—(மீசையைத் தடவிக்கொண்டு) என்ன சாமி, சும்மாயிருக்கிறீங்க, சொல்லுங்கள்.

**கணபதி** :—கோடீஸ்வரர் தனபால முதலியார்னு கேள்விப்பட்டிருக்கிறீரேன்னே, அவர்தான் இவர். வீடு வாசல், தோட்டம் துறவு, நிலம் நீருண்ணு எதேஷ்டமா கிடக்கு இவா பேர்லே. நோக்குகூட தெரிந்திருக்கணுமே.

**வேலா** :—கேள்விப்பட்டிருக்கிறேன், கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த ஏழை வீட்டிற்குத் தாங்கள் வர நான் என்ன பாக்கியம் செய்தேனோ!

**கணபதி** :—(சிரித்துக் கொண்டே) இந்த வீட்டிற்கு மருமகனுக வருவதற்கு என்று திருத்திக் கொள்ளுங்கள், ஓய்.

**வேலா** :—(திகைப்போடு) மருமகனாகவா... எனக்கொன்றும் புரிய வில்லையே. நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்.

**கணபதி** :—ஆமாம் ஐயா, ஆமாம். மருமகனாகத்தான். வேலாயுதம், இனிமேல், உம்ம கஷ்டமெல்லாம் தொலைந்தது என்றே வைத்துக்கொள்ளுங்கள். இதோ இதில் ரூபாய் 2000 இருக்கிறது. இதை அந்தச் செட்டி வந்தால் அவன் முகத்தில் விட்டெறியுங்கள். நல்ல முகூர்த்தத்தைக் குறிப்பிட்டுக் கொள்வோம். கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் துவங்கிடலாம். செலவுக்குப் பணம் வேண்டுமே என்று கவலைப்படாதீர்கள். எல்லாம் அவர் பொறுப்பு. என்ன சொல்லுகிறீர்கள்.

[வேலாயுதம் இதைக் கேட்டுத் திகைப்படைகிறார். அவர் மனத்தில் ஒரே குழப்பம்.]

**வேலா** :—**மனம் 1** : அடே பாதகா, பச்சைக் கிளியை வளர்த்துப் பாழும் பூனைக்கா இரையாக்கப் போகிறாய். அவனுக்கு மீசை நரைத்து விட்டது. திரை விழுந்து விட்டது; கூன்கூட விழும் தறுவாயில் இருக்கிறானே. அவன் கிழவன், கிழவன். அவனுக்குக் கொடுக்காதே. தாயில்லாத குழந்தையவள். அவள் தாய் உயிரோடு இருந்தால், நீ இப்படிச் செய்ய முடியுமா? கண் தெரிந்தும் கிணற்றில் விழுவதைப்போல இருக்கிறதே உன் செயல். அட பைத்தியக்காரா!

**மனம் 2** :—அட பைத்தியக்காரா, வலிய வந்த ஸ்ரீதேவியை வேண்டாம் என்று உதைத்துத் தள்ளும் பித்தனே! உன் மகள் மாளிகையில் மனோகரமான வாழ்வு நடத்த உனக்குப் பிடிக்கவில்லையா? நீதான் ஒரு மாளிகை கட்டிக்கொள்ளக் கூடவில்லை. உன்னைப்போல ஒரு அன்னக் காவடிக்கு வக்கில்லாதவன். உன் மகளை மணம் செய்விக்க விரும்புவாயோ.

**மனம் 1** :—அன்னக் காவடியாக இருந்தால் என்ன? அவளுடைய மனதிற் கிசைந்த மணவாளன்தானே தேவை. மனம் பெரிதா? பணம் பெரிதா?

**மனம் 2** :—அப்பா, பணம் தான் பெரிது. பணம் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் ஒன்றுமே அனுபவிக்க முடியாது. ஒரு 2000 ரூபாய் கடனை அடைக்க முடியாமல் நீ எவ்வளவு பாடு பட்டாய்? உன்னை அந்தச் செட்டியார் எவ்வளவு துச்சமாகப் பேசினான். நினைவிருக்கிறதா? உன்னிடம் மட்டும் பணம் இருந்தால் அவன் அப்படிப் பேசியிருப்பானா? பணம் இருந்தால் அவன், அவராவான். சாதாரணமானவள் ஸ்ரீமதியாவாள். அந்த உலகத்திற்கே அவளை அனுப்பு. தயங்காதே.

**மனம் 1** :—பணக்கார உலகத்திற்கா உன் மகளை அனுப்பப் போகிறாய்; வேண்டாம் அப்பா வேண்டாம். பணக்கார உலகம் ஓர் விசித்திரமான உலகம். புனுகு பூசப்பட்ட புண் அது. இரக்கம் என்ற பண்பை இழந்த உலகம் அது. நேர்மையோ, நாணயமோ அங்கே துச்சம். நீதியின் தராசு அங்கே வளைந்து கொடுக்கும். கிழவன் குமாரனுவான். விபசாரி, கற்புக் கனலாக்கப்படுவாள். கள்ளத்தனம் அங்கே கீர்த்திக்கும் கித்தாப்புக்கும் குறுக்கு வழி. இப்போது கூறு. எங்கே அனுப்பப் போகிறாய் உன் மகளை. அங்கா? இங்கா?

**மனம் 2** :—எவனுவது தான் சாவ மருந்து சாப்பிடுவானு? உலகமே அந்தப் பணக்கார உலகப் பாதையை நோக்கிச் செல்லும் போது நீ மாத்திரம் விலகி நிற்கிறாயே, ஒரு அதிசயப் பிரகிருதியப்பா நீ. நோயுள்ளவன் வாயில் எவ்வளவுதான் தித்திப்புப் பண்டங்களைப் போட்டாலும், அவை அவனுக்குக் கசக்கத்தான் கசக்கும். ஏழ்மை என்ற வியாதியால் பணக்கார உலகம் உனக்குப் படுபாதாளமாகத் தோன்றுகிறது. உன் மேல் குற்றமில்லை. உன் வியாதிமேல்தான் குற்றம்.

**கணதி** :—என்ன வேலாயுதம், பெரிய யோசனையில் இறங்கிட்டேயள். எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கு இவ்வளவு பலத்த யோசனை.

**வேலா** :—ஒன்றுமில்லை. வயசுதான்......

**கணதி** :—என்ன வயசய்யா? இன்றைக்கெல்லாம் ஆனுல் நாற்பத்தெட்டு அல்லது நாற்பத்தொன்பது ஆகும். இது ஒரு வயசா?

**வேலா** :—எனக்கொன்றுமில்லை. எனக்குப் பிடித்தந்தான். இவ்வளவு பெரிய மாப்பிள்ளை எனக்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறுன். எதற்கும் அவளை ஒரு வாய்ப் பேச்சு கேட்டு விட்டால் நன்றுக இருக்கும் என்று நினைக்கிறேன்.

**கணபதி** :—நீங்கள் சம்மதம் என்று கூறிவிட்ட பிறகு அவள் மாட்டேன் என்று சொல்வாள்... நீங்கள் அவளைக் கேட்பதில் எங்களுக்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை. அவளையும் கேளுங்கள்.

**வேலா** :—அப்பொ இன்னும் ஒரு வாரம் பொறுத்துத் தெரியப் படுத்தரேன்.

**தனபா** :—உங்கள் சௌகரியம் போலச் செய்யுங்கள்.

[ திரை ]

## காட்சி 4.

இடம் :—தனபாலர் வீடு.

இளங்கோ :—அப்பா !

தனபாலர் :—என்னடா? என்ன வேண்டும். பணம் ஏதாச்சும் வேண்டுமா ?

இளங் :—(தலையைச் சொரிந்து கொண்டே) நான் முன்னே சொன்னேனே அதைப்பற்றி...

தனபா :—முன்னே என்னடா சொன்னே? எனக்கு ஒன்றும் நினைவில்லையே.

இளங் :—அதான் அப்பா கனகம் விஷயமா ?

தனபா :—ஓ உன் காதல் விவகாரத்தைப் பற்றி சொல்றயா ... அதைப் பற்றி இப்பொழுதென்ன ? நான் தான் அது நடக்கிற விஷயமில்லே. மறந்துட வேண்டியதுதான் என்று முன்னேயே சொல்லிப்பிட்டேனே.

இளங் :—கடைசி முறையாகக் கேட்கிறேன்.........

தனபா :—என்னடா காது குத்தரே. முடியாதுதான். சும்மா பன்னிப்பன்னிப் பேசறதுலே பலன் இல்லே. எவளோ ஒருத்தி குலம் கோத்திரம் தெரியாதவளைக் கட்டிக்கணுமாம். போடா பவிஷைக் கெட்டவனே ! என்னெதிரில் நிற்காதே. அவளைக் கட்டிக் கொண்டே, இந்த வீட்டு மேடை மீது காலை வைக்க முடியாது. என்மகன் செத்தான் என்று நினைத்து நான் தலை முழுகிடுவேன், ஆமாம்.

இளங் :—அப்பா, நான் போகிறேன். எனக்கு இந்த வீடு வேண்டாம், வாசல் வேண்டாம். எல்லாவற்றையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். இஷ்டமில்லாத பெண்ணோடு இந்த மாளிகையில் வாழ்வதைவிட, கருத்துக்கிசைந்த கனகத்தோடு குடிசையில் வாழ்வது எவ்வளவோ மேல்.

(போகிறான்)

தனபா :—(திடுக்கிட்டு) அடட நெசமாகவே போய் விட்டானே. சும்மா மிரட்டுகின்றான் என்றல்லவா நினைத்தேன்...சீ ! உம் ! கழுதை கெட்டால் குட்டிச் சுவர். எங்கே போய்விடப் போகிறான். கெட்டலைஞ்சு கடைசியில் இங்கேதானே, வருவான்.

## காட்சி 5.

மாந்தோப்பில்—(இளங்கோ வருகிறான்)

**கனகம்** :—வந்து விட்டீர்களா !

**இளங்** :—ரொம்ப நாழிகையாகக் காத்துக் கொண்டிருக்கின்றாயா, கனகம் ?

**கனகம்** :—இல்லை. சற்று நேரத்திற்கு முன்தான் வந்தேன். அதிருக்கட்டும். என்றும் பூர்ண சந்திரன் போலப் பொலிவோடு விளங்கும் தங்கள் முகம், இன்று தேய்ந்த பிறைபோலக் காணப்படுகின்றதே... உடம்பு சரியாக இல்லையா ?

**இளங்** :—ஒன்றுமில்லே......வந்து......

**கனக** ;—ஏன் தயக்கம். சீக்கிரம் சொல்லுங்களேன்.

**இளங்** :—கனகம்! (மென்று விழுங்கி) நான் அப்பாவிடம் சண்டை போட்டுவிட்டு வீட்டை விட்டே வெளி வந்து விட்டேன்.

**கனக** :—சண்டையா ? அப்பாவிடமா ? ஏன் ?

**இளங்** :—குருடனால் கொடி இடையாளின் அழகை ரசிக்க முடியாது. அப்பாவால் காதலின் மகத்துவத்தை உணர முடியாது. அப்படிப்பட்ட இடத்தில் எனக்கென்ன வேலை கனகம் ?

**கனக** :—"........................".

**இளங்** :—என்ன யோசிக்கிறாய் ? அப்பாவிடம் நான் சண்டை போட்டது உனக்குப் பிடிக்க வில்லையா ?

**கனக** :—இல்லை.........ஒன்றுமில்லை.........நான் ஒன்றும் யோசிக்க வில்லையே.

**இளங்** :—(இரு கரங்களாலும் அவள் முகத்தை நிமிர்த்தி) இல்லை கனகம், நீ ஏதோ ஒன்றை மறைக்கப் பார்க்கின்றாய். என்னிடம் கூடவா ஒளிவு மறைவு. என்ன நினைத்தாய் சொல்.

**கனக** :—என் நா கூசுகிறதே, நான் எப்படிச் சொல்வேன்; என் வாயால் அதைக்கூறச் சொல்லுகின்றீர்களே.

**இளங்** :—பயப்படாதே கனகம். என்ன நடந்தது ?

**கனக** :—அப்பா எனக்குக் கல்யாணம் நிச்சயித்துவிட்டார்.

**இளங்** :—ஆ!... கல்யாணமா ?... உனக்கா ?... அதற்கு நீ என்ன பதில் சொன்னாய்.

**கனக** :—என்னை (தேம்பிக்கொண்டே) அவர் இன்னும் ஒன்றும் கேட்கவில்லை,......அவர் பேசிக்கொண்டிருந்தபோது நான் ஒட்டுக் கேட்டேன். அப்பாவும் தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார். மாப்பிள்ளைக்கு வயது நாற்பத்தொன்பது ஆகிற தாம். இரண்டாந்தாரம் போலிருக்கிறது.

**இளங்** :—இரண்டாந்தாரம்! நாற்பத்தொன்பது வயது!! அந்தக் கிழட்டுப் பிணம் யார் என்று உனக்குத் தெரியுமா கனகம்.

**கனக** :—அவர் பெயர்.........

**இளங்** :—அவர் பெயர்?

**கனக** :—தனபால முதலியார்.

**இளங்** :—ஆ!...... தனபால முதலியாரா? (மூர்ச்சித்து விழுகிறான்; அவனைக் கனகம் தாங்கிக்கொள்கிருள். கீழே படுக்க வைத்து விட்டு ஓடிச்சென்று தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளிக்கிருள்.)

**கனக** :—(முகவாய்க் கட்டையைப் பற்றிக்கொண்டு) இப்போது எப்படி இருக்கிறது?

**இளங்** :—(கண்ணைத்திறந்து) இப்போது தேவலை (இளங்கோ எழுந் திருக்கப் பார்க்கிறான்.)

**கனக** :—எழுந்திருக்காதீர்கள். கொஞ்சம் பொறுங்கள். மயக்கம் தெளியட்டும்.

**இளங்**:—(அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு) கனகம், உன்னுடைய இப் பூப்போன்ற கரங்களை நான் இனி ஸ்பரிசிக்க உரிமையற்றவ ளுக ஆகிவிட்டேன். எனக்குத் தாரமாக ஆவாய் என்று நான் இதுநாள்வரை கனவு கண்டேன். ஆனால், நீ எனக்குத் தாயாக ஆகப்போகிருய்!

**கனக** :—ஐயோ, என்னவெல்லாமோ பேசுகின்றீர்களே. எனக்கு ஒன்றுமே புரியவில்லையே.

**இளங்** :—ஆமாம் கனகம் உனக்குப் புரியாதுதான். உன்னை மணக்க வருகிருனே கிழவன், அவன் யார் தெரியுமா?

**கனக** :—பெரிய பணக்காரன் என்றுதான் கேள்விப்பட்டேன். ஏன் அவரை உங்களுக்கு முன்னமே தெரியுமா?

**இளங்** :—(எழுந்து நின்று) அவர்தான் என் அப்பா.

**கனக** :—உங்கள் அப்பாவா?

இளங் :—என் காதலைத் தெரிவித்தபோது குலம் பாழாகிவிடும், கோத்திரம் பாழாகிவிடும் என்று கூக்குரலிட்டாரே, அதே மகானுபாவர்தான், இப்போது உனக்கு மாலையிட வருகிறார். காதலுக்குத்தான் குலமும் கோத்திரமும், காமத்திற்கு அவை பார்க்க வேண்டிய அவசியமில்லை போலும்.

கனக :—(படபடப்போடு) இன்னுமேன் தயக்கம். வாருங்கள், அதோ ஓடுகிறது ஆறு, அதில் இருவரும் சங்கமம் ஆகிவிடுவோம். நம்முடைய கைகோர்த்த பிணங்களை உலகத்திற்கோர் பாடமாக ஆக்குவோம், வாருங்கள்.

(கரங்களைப்பற்றி இழுக்கிறாள்.)

இளங் :—கனகம்! அவசரப்படாதே!

கனக :—ஏன்? இந்தச் சதுப்புச் சமூகத்தில் வாழவேண்டுமென்ற ஆசை இன்னமும் உங்களைப் பிடித்தாட்டுகிறதா? அல்லது சாகப் பயப்படுகின்றீரா? உங்களை ஒரு வீரர் என்று நினைத்தேன். உங்கள்நரம்பிலே தமிழ் இரத்தம் ஓடுகின்றது என்று எண்ணினேன். ஆனால்......

இளங் :—கனகம், நிறுத்து உன் பேச்சை. சாவுக்குப் பயப்படும் சழக்கன் நானல்ல.

கனக :—பின் ஏன் இந்தத் தயக்கம்?

இளங் :—(சாந்தமாக) கனகம், பூனை கண்ணை மூடிக்கொண்டு விட்டால் உலகமே இருண்டு விடுமா?

கனக :—இல்லை.

இளங் :—உலகமே இருண்டு விட்டால் பூனைக்குக் கண் தெரியாமல் போகுமா?

கனக :—அதுவும் கிடையாது.

இளங் :—அப்படியானால் நாமும் சாகத் தேவையில்லை. நாம் தற்கொலை செய்துகொண்டுவிட்டால் சமூகம் ஜனத்தொகையில் இரண்டைக் கழித்துவிடும். மற்றபடி புதிய மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. உலகத்தின் துன்பங்களை எதிர்த்துப் போராடும் மன வல்லமையற்ற கோழைகளுக்குத்தான் தற்கொலை சுலுவான மார்க்கம். உனக்கும் எனக்குமல்ல.

கனக :—(அழுதுகொண்டே) அப்படி யென்றால் அக் கிழவனையே மணக்கச் சொல்லுகின்றீரா. உங்களையும் மறக்க வேண்டுமா?

வானத்தில் சந்திரன் இல்லாத நாள்—அமாவாசை என்று ஒரு நாள் இருக்கிறது. ஆனால், அன்பரே! என் இருதயத்தில் உங்களைப் பற்றி எண்ணமில்லாத நிமிடமே கிடையாதே. அப்படியிருக்க நான் எப்படி உங்களை மறக்கப் போகிறேன்.

(இளங்கோ, கனகத்தின் கண்களைத் துடைக்கிறான். அப்போது மரங்களுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த சேரன் அவர்கள் முன்னால் வருகிறான். இருவரும் திடுக்கிட்டு விலகுகிறார்கள்.)

**சேரன்** :—(புன்னகையோடு) தற்கொலையும் தேவையில்லை. மறக்க வேண்டிய அவசியமும் இல்லை.

**கனக** :—அண்ணா! நீயா? நீ எங்கு வந்தாய்?

**சேரன்** :—தோப்பிற்கு வந்தேன். பேச்சுக் குரல் கேட்டது. உற்றுப் பார்த்தால் நீயும் இளங்கோவும்! உடனே மறைந்துகொண்டேன்.

**கனக** :—அப்படியென்றால் நீ எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தாயா அண்ணா?

**சேரன்** :—ஆமாம் கனகம். முழுக்க முழுக்கக் கேட்டேன். கேட்டது மட்டுமல்ல, உன்னை மீட்கவும் போகிறேன். நீ கவலைப்படாதே. உன்னைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு. நீ வீட்டிற்குப் போ. அப்பா உன்னைத் திருமண விஷயமாகக் கேட்பார். சரி என்று ஒப்புக்கொள். ஆனால், ஒரு நிபந்தனை. திருமணம் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக ஒரு கோவிலில் நடக்க வேண்டும் என்று கூறு. எப்படியாவது தனபாலனையும் சம்மதிக்கச் செய்து விடு. மற்றவைகளை யெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்.

**கனக** :—சரியண்ணா, நான் வருகிறேன்.

(கனகம் இருவரிடமும் விடைபெற்றுச் செல்லல்.)

**சேரன்** :—இளங்கோ! இப்படி வா. (காதில் ரகசியமாக ஏதோ கூறுகிறான்) எப்படி என் யோசனை.

**இளங்** :—சபாஷ் சேரா, உன் யோசனைக்குக் கேட்க வேண்டுமா?

[ திரை. ]

## காட்சி 6.

இடம் :—வேலாயுதம் வீடு.

**வேலாயுதம்** :—கனகம், கனகம்.

**கனகம்** :—ஏம்பா ?

**வேலா** :—(ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு) வா, இப்படி உட்காரம்மா. (கனகம் உட்காருகிறாள்.) கனகம், இதோ பாரம்மா, உங்கம்மா உங்களைச் சின்ன வயதிலேயே என் காலில் கட்டிவிட்டுப் போய் விட்டாள். நானும் ஏதோ கஷ்டப்பட்டு உங்களை இது வரையில் வளர்த்து விட்டேன். எனக்கோ 60 வயதாகப் போகிறது. உனக்கொரு கல்யாணம் பண்ணி நீ ஒரு குடியும் குடித்தனமுமாக ஆகிவிட்டால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன். தனபால முதலியாராம், பெரிய பணக்காரனாம். உன்னைக் கேட்கிறார்கள். நீ என்னம்மா சொல்லுகிறாய் ?

**கனக** :—எனக்கென்னப்பா தெரியும்? உங்களுக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதம்தான்.

**வேலா** :—(தயக்கத்துடன்) அவருக்கு வயது 45 ஆகிறதாம். எனக்குக்கூட உங்கம்மாவைக் கட்டிக்கொண்ட போது 42 போ 43 தானோதான். மாப்பிள்ளை பெரிய பணக்காரனாக இருக்கிறான். உனக்கு ஒரு குறைவும் வைக்கமாட்டான். நீ உட்கார்ந்தே சாப்பிடலாம்.

**கனக** :—நான்தான் அப்பொழுதே சரியென்று சொல்லிவிட்டேனே ...உம்... ஒன்று சொல்ல மறந்து விட்டேன்.

**வேலா** :—என்னம்மா அது ? வெட்கப்படாமல் சொல்லு.

**கனக** :—நாமோ ஏழைகள்: தடபுடலாகக் கல்யாணம் பண்ணினால், மாப்பிள்ளை வீட்டாரிடம் பணம் வாங்கினோம் என்று ஊரார் தூற்றுவார்கள். அதனால் யாருக்கும் சொல்லாமல் கல்யாணத்தை ஒரு கோயிலில் நடத்த வேண்டும் என்று நான் விரும்புவதாக மட்டும் அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அவ்வளவுதான்.

**வேலா** :—சரி அப்படியே செய்யறேன்...... அண்ணா எங்கே ?

**கனக** :—அவரை ஒரு சினேகிதர் வந்தழைத்தார். இருவரும் வெளியூருக்குப் போயிருக்கிறார்கள் போலிருக்கிறது.

(வேலாயுதம் போகிறார். கனகம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறாள்.)

[ திரை ]

(தொடரும்.)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

*சென்ற ஜூலை மாதத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.*

அதிகாரத்திற்கு வந்தது முதல், தளபதி நாகூப், மடமடவென்று மக்கள் முன்னேற்றத்துக்கான சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார். இந்த ஆறுமாத காலத்திற்குள்ளாக அவர் சாதித்திருக்கிற காரியங்கள் ஏராளம்.

ஆட்சிப் பீடத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்த ஊழல் ஒழிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடையே தாண்டவமாடிக் கொண்டிருந்த லஞ்சம் வாங்கும் பழக்கம் தொலைக்கப்பட்டிருக்கிறது. பொதுநலத்தின் பெயரை முன்வைத்துத் தங்கள் சுயநலத்தை வளர்த்துக் கொண்ட அரசியல் தலைவர்களின் அட்டகாசத்திற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. தளபதி நாகூபின் புதிய சீர்திருத்தங்களை எதிர்க்கத் துணிந்த அரசியல் கட்சிகள் யாவும் கலைக்கப்பட்டுவிட்டன. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் யாரும் நிலம் வைத்திருக்கக் கூடாது என்று சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட அளவுக்குமேல் நிலம் வைத்திருப்பவர்கள் யாவரும் அப்படி அதிகப்படியாக வைத்திருக்கும் நிலத்தைத் தாங்களே ஆட்சியாளரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று அறிக்கை விடுக்கப்பட்டு, அப்படி ஒப்படைக்கத் தவறியவர்கள் யாவரும் கடுஞ் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறாகக் கிடைத்த நிலங்கள் யாவும் நிலமில்லாத உழவர்களுக்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமலிருந்த மக்களின் குறைகள் யாவும், ஒவ்வொன்றாகக் கவனிக்கப்பட்டு, அந்தக் குறைகளைப் போக்குவதற்கான வழிகள் வகுக்கப்பட்டு வருகின்றன. தொலைந்தார் மன்னர்—தொலைந்தன எம் குறைகள் என்று குதூகலத்துடன் கூவுகின்றனர் எகிப்திய மக்கள்.

மேலே எழுப்பப்பட்ட பந்து கீழே விழுந்தே தீரும்—இந்த விநாடியில் இல்லாவிட்டாலும் அடுத்த விநாடியில்.

மக்களால் வெறுக்கப்படுகிற ஆட்சி அழிந்தே தீரும்—இன்றைய தினம் இல்லாவிட்டாலும் நாளையதினம்.

'மன்னர் பரூக்' கின் மகத்தான வீழ்ச்சி அகில உலகத்திற்கும் அறிவிக்கும் அருமையான உண்மை இது.

# நாடகக் கலையை வளர்த்த நல்லறிஞர்

"தமிழ் நாடகக் கலைக்கு ஒரு புதிய உருவத்தையும் ஒரு புதிய ஒளியையும் கொடுத்து, அதனை இலக்கிய அழகும் இனிமையும் வாய்ந்ததாக மாற்றி அமைத்தவர் சம்பந்த முதலியார். அது மட்டுமல்ல. நாடகக் கலையை சமுதாய சீர்திருத்தத்துக்கான ஒரு சிறந்த கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கிய நல்லறிஞரும் அவர் தான்."

— ஸர். சி. பி. ராமசாமி அய்யர்

"வாழ்க்கையையே நாடகமாக நடித்துக் காட்டக்கூடிய பண்பு அவருடையது. தமிழ் நாட்டில் அவருடைய வாழ்க்கை என்றென்றும் சிறப்புடன் திகழும் என்பது உறுதி."

— டாக்டர் மு. வரதராசனுர்

"நாடக நூல்-நாடக மேடை—ஆகிய சொற்களைக் கேட்டாலே தமிழ் மக்கள் பெரிதும் வெறுப்படைந்திருந்த ஒரு காலத்தில் சம்பந்த முதலியார் நாடகத் துறையில் தன் அரிய முயற்சிகளைத் தொடங்கி தமிழ் மக்கள் உள்ளத்தில் கலை ஆர்வத்தையும் மகிழ்ச்சி அலைகளையும் எழுப்பியிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை."

— முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார்

"தமிழ் நாடகக் கலையின் தந்தை சம்பந்த முதலியார். அவர் செய்த ஒப்பற்ற முயற்சியாலேயே தமிழ் நாடகக் கலை புத்துயிர் பெற்றது."

— வி. சி. கோபாலரத்தினம்

"சம்பந்த முதலியாரின் நாடகங்கள் இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் பயன்படக் கூடியவை. நாடகக் கலை தமிழ் நாட்டில் உயர்ந்திருப்பதற்கு அவர் ஒரு முக்கியமான காரண கர்த்தா."

— மேயர் செங்கல்வராயன்

"எழில் ததும்பும் பல நாடகங்களைச் சுவைததும்ப எழுதிச் செந்தமிழர் வாழ்க்கையில் கலை உணர்ச்சியைத் ததும்பச் செய்த நல்லறிஞராவார். சம்பந்தனுர். அவர் ஆற்றிய அரும்பணியைத் தமிழ் நாடு என்றென்றும் பாராட்டும்."

— அறிஞர் அண்ணதுரை

நாடகக் கலையை வளர்த்த நல்லறிஞர்—நாடகப் பேராசிரியர்—தமிழ் நாடகக் கலையின் தந்தை என்று தமிழ் மக்களால் அன்றும் இன்றும் போற்றிப் புகழப்படுகிற பெருமை படைத்தவர் **ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்.** அவருடைய 81-வது பிறந்த நாள் விழா, சென்னை நகரில், 1-2-53

ஞாயிற்றுக் கிழமையன்று, தமிழ் மக்களெல்லாம் பெருமைப் படத் தக்க முறையிலும் பூரிப்படையத் தக்க வகையிலும் நடைபெற்றிருக்கிறது.

பேராசிரியர் சம்பந்தனாரின் பிறந்த நாள் விழாவிலே ஒரு குறிப்பிட்ட கட்சியினர் மட்டுமல்ல—சகல கட்சியினரும், ஒரு குறிப்பிட்ட கொள்கையை உடையவர்கள் மட்டுமல்ல பல்வேறு முகாம்களிலே உலவுபவர்களும் பெருமகிழ்ச்சியுடன் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றனர். திருவாளர்கள் முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார், சென்னை மேயர் டி. செங்கல்வராயன், போன்ற காங்கிரஸ் தலைவர்களும், அறிஞர் அண்ணாதுரை, பேராசிரியர் அன்பழகன், கவிஞர் கண்ணதாசன் போன்ற திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்களும், திரு. வி. கல்யாணசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார் போன்ற இலக்கியத் துறை அறிஞர்களும், வி. சி. கோபாலரத்தினம்—வி. வி. சீனிவாச அய்யங்கார் போன்ற புகழ் மிக்க வழக்கறிஞர்களும், என். எஸ். கிருஷ்ணன்—பாலசந்திரன் - டி. கே. சண்முகம் போன்ற நடிகர்களும், சாதி—மதம் — கட்சி — கொள்கை — அந்தஸ்து முதலிய எத்தகைய வேறுபாடுகளையும் கருதாமல் சம்பந்த முதலியாரின் பிறந்த நாள் விழாவிலே கலந்துகொண்டிருக்கின்றனர். பல்வேறு முகாம்களிலே பற்பல கொடிகளின் கீழ் பணியாற்றி வரும் இத்தனை தலைவர்களும் தங்களுக்கிடையே இருந்து வரும் கட்சிப் போராட்டங்களையெல்லாம் மறந்துவிட்டு ஒரே மேடையில் கூடி நின்று சம்பந்த முதலியாரைப் பாராட்டத் துணிந்த அந்த அரிய நிகழ்ச்சி ஒன்றே போதும், சம்பந்த முதலியாரின் சிறப்பு எத்தன்மையது என்பதை எடுத்து விளக்க.

ஒரு காலம் இருந்தது-நாடகம் என்ற பேச்சைக் கேட்டாலே தமிழ் மக்கள் நல்ல பாம்பைக் கண்டது போல அஞ்சி ஒதுங்கிச் சென்ற காலம்; "நாடகமா—நாம் போவதா—செச்சே, கூடாதப்பா கூடாது" என்று வெறுப்புத் தொனியுடன் இளைஞர்கள் கூறிக்கொண்டிருந்த காலம்; நாடகக் கலையில் ஈடுபட்டிருந்தவர்களை இழிவாகவும் தாழ்வாகவும் நம் நாடு எண்ணிக் கொண்டிருந்த காலம். அப்படிப்பட்ட காலத்திலேதான் சம்பந்த முதலியார், புன்முறுவல் பூத்த முகத்துடனே நாடக உலகிற்குள் நுழைந்தார். நுழைந்த போது அவருக்குக் கிடைத்த பரிசுகள் புகழ் மாலையும் பாராட்டு இதழுமல்ல—கேலிச் சொற்களும் கிண்டல் அம்புகளும் தான். "இந்த மனிதனுக்கு ஏனையா இந்த வேலை"—கோபத்தோடு கேட்டார்கள் சிலர். "இது ஒரு தினுசான புதுப் பைத்தியம்."—இப்படி நையாண்டி செய்தார்கள் வேறு சிலர். "இவரால் ஆகிற காரியமா இது? நடக்குமா இவரால்?"-சந்தேகக் கணைகளைப் பூட்டினார்கள் மற்றும் சிலர். "ஐயோ

பாவம்! சுகமாக இருந்து சொகுசாக வாழவேண்டிய மனிதர் ஏனோ தெரியவில்லை இப்படி கரடு முரடான பாதையில் அலைந்து கஷ்டமும் நஷ்டமும் அடைகிறார்!"—என்று பரிதாபக் குரலில் பேசினார்கள் அவர்மீது பரிவுணர்ச்சி படைத்த இன்னும் சிலர். ஆனால், "நீ செய்வது நல்லது தான், தேவைதான், நாங்களும் உடன் இருந்து உழைப்போம், நீ அஞ்ச வேண்டாம்" என்று தைரியமொழி கூறி அவருக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியவர்கள் யாரும் இல்லை அந்தக் காலத்தில். ஆனால் அவர், எதிர்ப்புக் கண்டு சளைக்காமல், கேலி கண்டு களைக்காமல், ஏசல்மாரியால் துவளாமல், கிண்டல் சொற்களால் மனம் உடையாமல் தொடர்ந்து பணியாற்றினார். ஒன்றன் பின் ஒன்றாக அறுபதுக்கு மேற்பட்ட அழகிய புதிய நாடகங்களை இயற்றினார். நாடகங்களை இயற்றியது மட்டுமல்ல, தானே முகத்துக்குச் சாயம் பூசிக்கொண்டு, மேடையேறி நடிக்கவும் தொடங்கினார். அவர் நடித்தார் என்பது மட்டு மல்ல முக்கியம், நூற்றுக் கணக்கான தோழர்களுக்கு நாடகத் துறையில் நல்லதோர் ஆர்வம் உண்டாகச் செய்து, அவர்களையெல்லாம் நடிக்க வைத்தார். சுகுண விலாச சபா என்ற பெயரில் இதற்கென்றே ஓர் சங்கத்தை ஏற்படுத்தி, வரிசை வரிசையாகப் பல அழகிய நாடகங்களை அனைவர் உள்ளத்தையும் அள்ளிக் கொள்ளும் வகையில் நடத்தி, நாடக மேடைக்கு ஒரு புதிய கௌரவத்தையும், தமிழ் நாடக நூல்களுக்கு ஒரு புகழ்மிக்க நிலையையும் தேடிக் கொடுத்திருக்கிறார்.

சென்ற ஐம்பது ஆண்டுகளில், சர். சி. பி. ராமசாமி அய்யர் குறிப்பிட்டிருப்பதைப் போல, சுமார் 520 முறை நடித்திருக்கிறார் சம்பந்த முதலியார்.

மணி-அதன் மீது மாசு! நீர்—அதன் மீது பாசி! வீடு-அதற்குள்ளே இருள்! இப்படிப்பட்ட நிலையில் இருந்த தமிழ் நாடகத் துறை, அறிஞர் சம்பந்தனாரின் ஐம்பதாண்டுப் பணியின் காரணமாக, இன்றைய தினம், மாசு நீங்கிய மணியாக ஜொலிக்கிறது. பாசி அகன்ற தெள்ளிய நீராகத் திகழ்கிறது. ஒளி வீசும் உயரிய இல்லமாக விளங்குகிறது.

தமிழ் நாடக மறுமலர்ச்சியின் ஆதிகர்த்தா-முதல் தலைவர்—முன்னோடும் பிள்ளை-திருவாளர் சம்பந்த முதலியார்.

அவரால், அவருடைய எழுத்தால், அவருடைய நடிப்பால், அவர் நடத்திய நாடகங்களால், அப்பெருந்தகையாளர் ஊட்டிய உணர்ச்சியால், அந்த உணர்ச்சியிலிருந்து பொங்கி எழுந்த ஆர்வ அலைகளால் தமிழ் உலகம் இன்றைய தினம் தலை நிமிர்ந்து நிற்க முடிகிறது நாடகத் துறையில்.

"நாடகமா—தமிழிலா—ஏது அப்பா தமிழில்?"—இப்படிச் சலிப்புடன் சொல்லப்பட்ட காலம் மறைந்து,

(45-ம் பக்கம் பார்க்க)

# காலமும் கருத்தும்

## அமைச்சர் அளித்த அறிவுரை!

“நம் நாட்டுக் கோயில்களில் எல்லாம், ஆறுகால பூஜை முதலான கோயில் செலவுகளுக்குத் தேவையான அளவுக்குமேல் ஏராளமான பணம் தேங்கிக் கிடக்கிறது. இப்படி முடங்கிக் கிடக்கும் பணத்தை ஆதரிப்பாரற்ற அனாதைகளைக் காப்பாற்றும் அரிய பணிக்குச் செலவிடலாம் என்பது என் கருத்து. ஒவ்வொரு பெரிய கோயிலும் ஓர் அனாதை விடுதியைத் தொடங்கி நடத்தவேண்டும்”, என்பதாகப் பேசியிருக்கிறார் அமைச்சர் வெங்கடசாமி நாயுடு 26-1-53 அன்று — பீளமேடு என்ற கிராமத்தில்! அமைச்சர் அளித்துள்ள அறிவுரை முற்றிலும் நியாயமானது. கோயில்களில், அவற்றின் தேவைக்கு மேல் குவிந்துகிடக்கும் செல்வத் திரளை, ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காகச் செலவிடுவது எந்த விதத்திலும் தவறான செய்கை ஆகாது. “மக்கட் பணியே மகேசன் பணி” என்றார்கள் நம் முன்னோர்கள். “நடமாடும் கோயில்களாகிய மக்களுக்குத் தொண்டு செய்தால், அது படமாடும் கோயில்களாகிய நம் ஆலயங்களுக்கும் தொண்டு செய்ததாக ஆகும்” என்றார் சிவநெறிச்சீலர் திருமூலர். “ஆண்டவனின் குழந்தைகள் மக்கள். ஆகவே, மக்களுக்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டே ஆகும்.” என்றார் உத்தமர் காந்தியடிகள். தன் பிள்ளைகள் பசித்திருக்கும்போது அவர்களுக்கு ஒரு கவளம் சோறு கொடுக்காமல் தனக்கு மட்டும் தினம் ஆறு வேளை உணவு படைத்தால் அதைக்கண்டு ஆநந்தமா அடைவார் ஆண்டவன்? தன் மக்களிலே பலர் நொண்டிகளாக இருக்க, அவர்களின் வாழ்வை நோக்கப் பயன்படாத செல்வம், தன்னுடைய குதிரை வாகனத்தின் வால் ஒடிந்து போனால் அதை மீண்டும் வெள்ளியால் செய்து நோக்குவதற்கு மட்டும் பயன்பட்டால், அதைப் பார்த்துப் பூரிப்பா கொள்வார் பன்னிருகையன்? ஆகவேதான் அமைச்சர் வெங்கடசாமி நாயுடு,

---

(44-ம் பக்கம் தொடர்ச்சி)

“நாடகம்தானே — நம் தமிழ் மொழியில் தானே—ஏராளமாக உண்டே” என்று பெருமையுடன் பேசக்கூடிய புதிய காலம் உருவாகியிருக்கிறது இப்போது.

உருவாக்கித் தந்தவர்தான் சம்பந்த முதலியார். எனவேதான் அவரை மட்டற்ற மகிழ்ச்சியுடன் பாராட்டியிருக்கின்றனர் சர்வ கட்சித் தமிழர்களும்! பாராட்டத்தானே வேண்டும்! பாராட்டுவது தானே நியாயம்!!

ஆண்டவனின் செல்வத்தில் மிச்சமிருக்கும் பணத்தை ஆண்டவனின் பிள்ளைகள் வாழ அள்ளிக் கொடுங்கள் தாராளமாக என்று கூறுகிறார். நாஸ்திகரப்பா அவர்! இப்படித்தான் பேசுவார் என்று யாரும் எளிதில் கூறிவிடமுடியாது. அமைச்சர் வெங்கடசாமியார் பழுத்த ஆஸ்திகர். நாடெங்கும் பக்தி மார்க்கம் நன்முறையில் தழைக்கவேண்டும் என்ற ஆவல் படைத்தவர். திருப்பதி வெங்கடேசப் பெருமாள் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்து பன்னெடுங்காலம் பணி ஆற்றியவர். அப்படிப்பட்ட சாந்தகுண சீலர் கூறுகிறார் சிறந்ததோர் மார்க்கத்தை என்றால் ஆண்டவனிடம் அன்பில்லாத காரணத்தால்தான் இப்படியெல்லாம் பேசுகிறார் என்று யார்தானாகட்டும், எப்படிச் சொல்ல முடியும்? அன்னார் அளித்துள்ள அறிவுரையை வழிகாட்டும் வான் பொருளாகக்கொண்டு, ஒவ்வொரு பெரிய கோயிலும் குறைந்தது ஒரு பெரிய அனாதை விடுதியையாவது உடனடியாகத் தொடங்கவேண்டும் என்பது நம் பெரு விருப்பம்.

## பாமர மனிதன் பாராளும் காலம் இது!

ஆம்! இப்படித்தான் பாடினான் கவிஞன் இக்பால்! இப்படிப் பாடி, இந்தக் காலம், ஜனநாயக காலம் என்பதையும், இந்தக் காலத்தில், முன் காலத்தைப் போல, நாட்டை ஆளும் உரிமை எங்களுக்கு மட்டுமே உண்டு என்று சீமான்களும்சரி, மன்னாதி மன்னர்களும் சரி, யாருமே கூற முடியாது என்பதையும் அழுத்தந்திருத்தமாக எடுத்துக் காட்டினான் அந்தப் பெரும் புலவன்! நாட்டை ஆளும் உரிமை ஒரு சிலருக்கே சொந்தம் என்று இருந்த நிலைமை அழிந்து, எல்லோரும் ஓர் குலம்-எல்லோரும் ஓர் நிறை—எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று கவிஞர் பாரதியார் கூறியதைப் போல, ஆட்சி உரிமை எல்லா மக்களுக்கும் ஏற்பட்டிருக்கிற காலம் இது. கட்டை வெட்டும் கந்தனானாலும் சரி, வெற்றிலை விற்கும் வேலாயியாக இருந்தாலும் சரி, மக்கள் அனைவருக்கும் வோட்டுப் போடவும், போதுமான சக்தியும், வசதியும் இருந்தால், ஆட்சிப் பீடத்தில் ஏறி அமரவும் நிச்சயமாக உரிமை உண்டு இந்த நாளில். இந்த அரிய உண்மையை அண்மையில் நடைபெற்ற திருவாங்கூர் நகராட்சி மன்றத் தேர்தல் மிக அழகாக எடுத்து விளக்குகிறது. அந்த நகராட்சி மன்றத்தின்கீழ் வேலை செய்யும் ஒரு சாதாரண தோட்டி, கே. கிருஷ்ணன் என்பவர். தெருப் பெருக்குவது — குப்பை வாருவது — அழுக்குகளை அகற்றுவது — இவைகள்தான் அவருடைய வேலைகள். பழைய காலமாக இருந்தால்? "தோட்டியா? செச்சே! அவன் அருகே போகாதே அப்பா!" —இப்படிக் கூறிடுவோம் நாம்! ஆனால் இப்போது? திருவிதாங்கூர் நகராட்சி மன்றத்தின் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்

டிருக்கிறார் அவர்! எந்த நகராட்சி மன்றத்தின்கீழ் தோட்டி வேலை செய்கிறாரோ அதே மன்றத்தின் ஆட்சித் தலைவர்களில் ஒருவராக மாறி இருக்கிறார் கே. கிருஷ்ணன், இப்போது! தோட்டிதான் கே. கிருஷ்ணன் இப்போதும் — ஆனால், அதே நேரத்தில் ஆட்சித் தலைவரும்கூட! டே கிருஷ்ணா! — இப்படித்தான் முன்னே கூப்பிட்டிருப்பார்கள் அவரை மேயரும் பிறரும்! ஆனால், இனி அப்படிக் கூப்பிட முடியுமா? "என்னுங்க கவுன்சிலர்வாள் - வாங்கோ, வாங்கோ!" என்றுதான் குழைவுடன் கூறுவர் இனி. பலம் பொருந்திய சீமான்கள், பண வெள்ளத்தில் மிதப்பவர்கள், செல்வாக்கு மிக்க பெரிய புள்ளிகள் இவர்களிலேயும் பலர் கௌன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இனி, சபை கூடும்போது, அச் சீமான்களுக்கு எதிரே சரி நிகர் சமானமாக உட்காருவார் தோட்டி கிருஷ்ணன். எண்ணிப் பாருங்கள் — இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க முடியுமா பழைய காலத்தில்? நிச்சயமாக முடியாது! ஆனால், இப்போது முடிகிறது! இது ஜனநாயக சகாப்தம் —இந்தக் காலத்தில் சகல மக்களும் சமம் என்பதற்கு இன்னுமென்ன ஆதாரம் தேவை? "நாங்கள் உசத்தி சாதி", "நாங்கள் மற்ற சாதிகளில் பெண் எடுக்க மாட்டோம்", "நாங்கள் சீமான்கள்", "மற்ற மனிதர்களோடு ஒன்றாகப் பழகமாட்டோம்", "நாங்கள் ஆளப்பிறந்தவர்கள் — மற்றவர்களெல்லாம் தாழ்ந்த இனம்—இழிந்த வகுப்பு" என்றெல்லாம் இன்னமும் பேசிக்கொண்டும் பிறரை ஏசிக்கொண்டும் இருக்கும் ஏமாளிகளுக்கு திருவிதாங்கூர் தேர்தல் ஒரு பாடமாக இருக்கட்டும். இனியேனும் அவர்கள் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருக்கும் குறுகிய சாதி மத அந்தஸ்து பேத வேறுபாடுகள் ஒழிந்து, மனித சாதியைச் சேர்ந்தவன் நான் — மக்கள் அனைவரும் என்னுடைய உறவினர்கள் என்று கூறும் விரிந்த மனப்போக்கு அவர்களுக்கு ஏற்படட்டும்.

## கடன்தொகை வளர்கிறது!

வட இந்தியாவில் கட்டப்பட்டு வருகிற தாமோதர ஆற்று அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, இந்திய ஆட்சியாளர்கள், அமெரிக்காவின் ஆதிக்கத்தில் உள்ள உலக பாங்கியிடமிருந்து, ஜனவரி மாத இறுதியில், ஒன்பது கோடியே இருபத்தெட்டு லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார்கள். 1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு முறை இதே பாங்கியிடமிருந்து இந்திய ஆட்சியாளர்கள் எட்டுக் கோடியே எண்பது லட்சம் ரூபாய் கடன் தொகை பெற்றிருக்கிறார்கள். இந்திய ரயில்வேக்களைச் சீர்திருத்தி அமைப்பதற்காக என்று கூறி வேறோர் சந்தர்ப்பத்தில் 19 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிறது இந்திய அரசாங்கம். பிரிட்டிஷாரின்

பிடிப்பிலிருந்து இந்தியா விடுதலை பெற்று ஐந்து ஆண்டுகள்தான் முடிந்திருக்கின்றன. இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக உலக பாங்கியிடமிருந்து இந்திய ஆட்சியாளர்கள் பல்வேறு நேரங்களில் பெற்றிருக்கிற கடன் தொகை அனைத்தையும் கூட்டிப் பார்த்தால் ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் ஆகிறது. இப்போது வகுக்கப்பட்டிருக்கின்ற ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றவும் வெளி நாடுகளிலிருந்து பெருந்தொகை எதிர்பார்க்கிறார்கள் ஆட்சித் தலைவர்கள். உலக பாங்கியிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டே போவோமானால், இறுதியில், கடன் தொகை, நம்மால் திருப்பித் தரமுடியாத அளவுக்கு வளர்ந்துவிடக்கூடும். அப்படிப்பட்ட ஆபத்தை உருவாக்கக்கூடாது நம் ஆட்சித் தலைவர்கள் இனியேனும். கூடியவரை பிற நாடுகளிடமிருந்தோ உலக பாங்கியிடமிருந்தோ கடன் வாங்காமல் இருக்கவேண்டும் நம் தலைவர்கள். மீண்டும் மீண்டும் கடன் வாங்குவது நாட்டின் நன்மைக்கு உகந்தது ஆகாது.

## நசுக்கிப் போடு அதை ! உம் ! சீக்கிரம் !

"மூட நம்பிக்கைதானே ! அது தான் மனித சமுதாயத்தின் மிகப் பெரிய விரோதி ! மனித சமுதாயம் முன்னேற வேண்டுமா ? ஆம் எனில் மூட நம்பிக்கையை உடனே நசுக்கிப் போடு ! உம் ! தயங்காதே ! சீக்கிரம் !" என்றான் **வால்டேர்** - பிரெஞ்சு நாட்டு அறிஞர் தலைவன். அவன் கூறிய வாசகத்தின் அரிய உண்மையை அழகாக எடுத்துக்காட்டுகிறது சேலத்திற்கருகே சமீபத்தில் நடைபெற்றதாகத் தினசரி ஏடுகளில் வெளிவந்துள்ள ஒரு சம்பவம். சேலத்திற்குப் பக்கத்தில் தொடலூர் என்றோர் கிராமமாம் ! அங்கே நல்லம்மாள் என்றோர் மாதாம் ! அவளுக்கு ஒரு குழந்தை பிறந்ததாம் 45 நாட்களுக்கு முன்பு. கண்ணே, மணியே, கட்டிக்கரும்பே என்றெல்லாம் கூறி தன் பிள்ளைக் கனி அமுதைச் சீராட்டி வந்தாளாம் அந்த அன்னை. அவளுக்கு ஒரு சிற்றப்பனாம், பெயர் அங்கமுத்தாம் ! நல்லம்மாளுக்குக் குழந்தை பிறந்தது என்ற நற்செய்தியைக் கேட்டதும் வேகமாக ஓடினானாம் அங்கமுத்து—ஜோஸ்யரிடம் ! குழந்தை பிறந்ததற்குப் பலன் என்ன என்று கேட்டானாம் ஜோஸ்யரை. குழந்தை உயிரோடிருந்தால் உனக்கு ஆபத்து—உன் உயிருக்கேகூட கெடுதல் வரும் என்றாராம் ஜோஸ்யர். அவ்வளவுதான் ஓடோடி வந்தானாம் அங்கப்பன். என் உயிருக்கா ஆபத்து இந்தக் குழந்தையால் என்று எண்ணினானாம். குழந்தையைக் கழுத்தை நெறித்துக்கொன்றுவிட்டானாம். மூட நம்பிக்கை எவ்வளவு பெரிய கெடுதிகளை நம் சமுதாயத்திற்குச் செய்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டும் ?

Edited, Printed and Published, by P. Veeraraghavan, at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady, Madras—1.